[illegible]

V3 · No. 28 17 July 1950

3L
ၮ211, N28KN
N30·3·28
1891R

1253

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 3] 1930 ௵ ஜூலை ௴ 17௨ [No. 28.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 541
2. மாதவி மாதவம்—பொ. இராமானுஜன் 543
3. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 545
4. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப்படலம்) 548
5. நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—8ம் தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 551
6. தேவாரமும் வானநூலும் E. T. சொக்கம்மாள் B. A., L. T. 553
7. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 555
8. வர்த்தமானம் 559

SEP 1930

189112

## கலாநிலயம்

### வண்டிமாடும் மாட்டுவண்டியும்

### 3

**சா**ந்தியிலே சார்வதல்லால் சாதிப்பதொன்றுமில்லை என்னுமிக் கருத்துச் சுயநயச் சூழ்ச்சியேயாகு மென்றெண்ணுதற்குச் சிறிதேனுமிங்கு இடமில்லை. சாந்தியை யெய்துதலே கொள்கையாய் முன்வைத்து எல்லாக்கருமங்களையுங் கடைபிடிக்க வேண்டுமென்று வற்புறுத்துமிது, யார் எங்கே எக்கேடு கெடினும் தான் சுகமாக விருக்கின்றவழியைப் பார்த்துக் கொள்வதே தக்கதென விவகரிக்கும் உலகமதியை யுட்கொண்ட நோக்கமுடைத்தன்று. அப்படி விவகரித்தவர், ஓரிடத்தும் ஒருநாளுஞ் சுகப்பட்டதில்லை என்னும் வாய்மையையே பற்பல வகைகளில் நினைவுறுத்திக்கொள்ளவல்ல அறிவும் அநுபவமும் உடையோர், சுயநயமெனும் இழிதகைக் கிணங்கியதோர் வாசகமென்று இதனை எண்ணமாட்டார். தனக்கே உண்மையான நன்மை இன்னதென்று உணர்ந்தபின் னன்றோ மற்றவர்க் கொருவன் உறுதியாய உதவியைச் செய்தலியலும். ஏதோ வோர் உரிமையை இழந்துவிட்டார் இவ்விந்தியர் என அதனைத் தேடித்தர முயல்கின்றார் சிலர். இந்தியர்தாம் ஏழைகளாய்ப்படி. இந்நாட்டுச் செல்வத்தை அயலார் கவர்ந்துசெல்லாமல் தடுக்க முயல்கின்றார் சிலர். சாதிவழக்கங்களைச் சிதைக்கவேண்டு மென்பார் சிலர், போற்றவேண்டு மென்பார் சிலர்; சமயப் பற்றினை நாட்டவேண்டு மென்பார் சிலர், ஒழிக்க வேண்டு மென்பார் சிலர். இம்முயற்சிகள் கைகூடவல்லன அல்லன என்பது ஒருபொருளன்று. இவை கைகூட வேண்டுமென்ற முயற்சிகளிடையே படுகின்ற துன்பங்கள் ஒருபுற மிருக்க, கைகூடியபின் அதனாற் கண்டபயன் யாதென்று வினவுதல் வீணோமோ. உடலும் உரிமையும் உடைமையும் அடைவதே சுகப்படற்குப் போதுமெனச் சொல்லத் துணிவாரைக் காண்பதரிது. இங்கிலாந்து, ஜர்மனி, அமெரிக்கா முதலிய தேயத்தினர்களுக்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றனவே. அயல்தேயத்திலிருந்து ஒருவரும் வந்து அரசாட்சிச் சூழ்ச்சியாலும், வர்த்தகத்தின் வாயிலாகவும் அவர்களுடைய பொருளை யாருங் கவர்ந்துகொண்டு போகவில்லையே. அங்குச் சாதிக்கொடுமை யில்லை; இளவயதில் விவாகமில்லை; பள்ளிக்கூடங்களிற் படிப்பவர் தொகை பலகோடி; பெண்சுதந்திரம் பெருகுகின்றது. எனினும் அத்தேயங்களில் இருப்பவர் உள்ளுறச் சுகப்பட்டவர்கள் என்று தெரியவில்லையே. அங்குந்தான் எத்தனையோபலர் அல்லலால் பிய்ப்புண்டு வருந்துகின்றனர் ஓலைக்கூரையின் கீழ் மனம்புழுங்கி உளைவதற்கும், நூற்றெழுபத்தெட்டாவது மாளிகை அடுக்கில் அழுங்கிச் சுழல்வதற்கும் வேற்றுமையுண்டோ. பட்டுச்சட்டையின் அகத்தேனும் வெற்றுடம்பிற் குள்ளேனும், பயத்தாலும் பொறாமையாலும் பேராசையாலும் படபடத் தயர்வது மார்பே. வயிற்றுப் பசியால் வாடுதலினும் வீணாசைநெடும்பசிக் கிரைதேடியலைதலே கொடிது. வயிற்றுப் பசிக்கு ஓர் வேளையும் அளவும் உண்டு. மற்றவைக்கு இவை இல்லாமையால் இன்னல்கள் எத்துணை மிகுகின்றன என்னும் இவ் வுலகறி உண்மையை எடுத்தியம்பலும் மிகை.

இதுவுமன்றி, பட்டுச்சட்டையொடு பத்தடுக்கு மாடத்தில் பசியாதிருந்து மனம்நொந்து நைகின்ற பாக்கியம் பெற்றவர் அங்குத்தான் எத்தனைபேர்? இங்குமே சிலர் செல்வத்தளவு துயரும் சேர்ந்தவர்கள் இல்லையோ! மற்று, இருக்கும் நிலையிலேயே அமைதியாய் வாழ்கின்ற மக்களுஞ் சிலர் இவ்வுலகத்தின் எப்புறத்திலும் இருக்கின்ற உண்மையும் மறுத்தற் குரியதன்று. ஆதலின் அவரவர் தத்தம் நெஞ்சினையே தடவிப்பார்த்துக்கொண்டு தனக்கே எது சுகமென்று தீர்கின்றதோ அதனை மற்றவர்க்கு ஆக்கிவைக்க முயல்வதன்றோ சுயநயமற்ற வறிவு?

"இன்னவை இருப்பதால் அவர்கள் சுகமா யிருக்கின்றனர், அன்னவை இருப்பின் இந்தியர்களாகிய நாமும் சுகமாக விருப்போம்'' என்னுமிப் பேச்சும் எண்ணமும் இக்காலம் மனிதரை மிகவும் நுண்ணியதோர் வகையில் வஞ்சித்துத் திரிகின்றன. இதனிலுள்ள, "அவர்கள்'' "நாம்'' என்னும் அப்பன்மைகளே இவ்வஞ்சனைக்கு அண்மிய காரணம். 'அவர்கள்'' எனப் பொதுப்படுத்தியும் "நாம்'' என உளப்படுத்தியும் பேசுவதன் பயனின்மை நுழைந்துநோக்கினால் தெரியவரும். ஓட்டுரிமை சுயஆட்சி வாணிபப்பெருக்கம் எந்திரத்திறமை சாதிமதப் பழக்கவழக்கங்களின் அமைப்பு முதலியவைகள் அவர்களுடைய நன்மைக்கு ஏற்றவாறு அங்கு அமைந்திருக்கின்றனவென்றும், இவைகள் இங்கு "நம்முடைய'' கேட்டிற்குக் காரணமாம்வகையில் நடைபெறுகின்றனவென்றும் நெடிது நினைந்திரங்கும்வண்ணம் கற்பித்து வருவது இக்காலத்திற் குரியதோர் கோலமாயிற்று. ஆனால் இதனில் ஓர் அரிய இரகசியத்தை ஊன்றிப் பார்த்து உணர்தல்வேண்டும். "அவர்கள்'' என்று அயல்நாட்டாரைக் குறிக்கும்போது அங்குச் சுகப்பட்டிருப்பவர்போல் தோன்றுகின்ற பணக்காரர்களையே நினைத்துப்பேசி மற்றவர்களை அறவே மறந்துவிட நேர்கின்றது. அவ்வாறே, "நாம்'' என்று இந்தியரைக் குறிக்கும்போது ஏழைகளையே நினைவிற்கொண்டு மற்றவர் மறக்கப்பெறுகின்றனர். இது இந்த வஞ்சனைக்கூத்தின் முதல் அங்கம். பிறகு, பணக்காரர்களாகிய அவர்களெல்லாம் சுகப்பட்டிருக்கின்றார்களென்றும், ஏழைகளாகிய இவர்களெல்லாம் கஷ்டமே படுகின்றனர்களென்றும், இந்த ஏழைகளும் அந்தப் பணக்காரர்களைப்போல் ஆகிவிட்டால் அப்புறம் அனைத்தும் சுகமே என்றும் விவகரிக்கின்றனர். இதனிற்கு என் செய்வது? அங்கும் இங்கும் பணக்காரர்களிலும் ஏழைகளிலும் துன்பப்படுகின்றவர்களும் இல்லையா, துன்பப்படாதவர்களும் இல்லையா, என்றகேள்வி அவரவர் நெஞ்சில் எழுகின்றபோது எதிர்நிற்க இயலாமல் ஒளிவது இரண்டாவது அங்கம். இதன்மேல் இக்கூத்தின் போக்கைத் தொடரவேண்டியது இக்கட்டுரையளவு அவசியமில்லை. இக்கேள்விக்கு வெருவிப்போய்ஒளிவானேன்! அல்லது அதன் குரல்வளையைப் பிடித்து வதைப்பானேன்! அதனோடு கலந்து உசாவினால் உறுதியோ பெரிதுமுளது. 'அவர்கள்', 'நாம்' என்னும் மாயங்களைச் சற்றே பின்னுற வகற்றி 'நான்', 'அவன்' என்று நினைத்துப் பேசினால் எல்லா விடைகளும் எளிதிற் கிடைக்குமே.

எந்தத்தேயத்தில் எவையெவையிருப்பதால் அவர்கள் சுகப்பட்டனர் என்று எண்ணலாகின்றனரோ அவர்களில் குறித்த பெயருடைய ஒரு சாத்தனைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். கார்லைல் கேட்பது போல் அவனை நாம், "ஐய,நீசுகமேயோ? என்றுகேட்போமெனின் அவன் தருதற்குரியவிடையாது?" "ஆம்'' என்று கூறவல்லவன் ஒருவனுமில்லை என்கின்றார் அவ்வறிஞர். "நீ கஷ்டமே படுவாயானல் அதனால் யாருக்கு என்ன நஷ்டம்; உனக்குமே, இலாபமன்றி அதனால் நஷ்டமில்லை'' என்றும் சாதிக்கின்றார் அவர். (இது கார்லைல் எழுதிய 'சுகம்' என்னும் கட்டுரையினின்றும் எடுக்கப்பெற்றிருக்கிறது. இக்கட்டுரையின் முழு மொழிபெயர்ப்பைக் கலாநிலயம், !-வது வால்யூம், 16 வது பக்கத்தில் காணலாம்) - அருமையாய் அறிந்துணர வேண்டிய சிறப்புடைய தத்துவம் இது. மற்று நாமிங்கு விளக்குவதற்கு மேற்கொண்டுள்ள விஷயத்தின்பொருட்டு, "ஆம், யான் சுகமே பெற்று வாழ்கின்றேன்'' என்று பொய்யுமின்றி உரைக்க வல்ல சாத்தன் ஒருவன் அங்கு இருக்கின்றானென்றேவைத்துக்கொள்வோம். இனி, 'என்பாடு கஷ்டமே' என்கின்ற கொற்றன் ஒருவனையும் இச்சாத்தனுக்கு அயலில் அழைத்துக்கொண்டு, "ஐய, சாத்தரே, உம்முடைய சுகத்திற்கு, இந்த அரசியல் ஆதியாய சாதனங்கள் எத்துணை காரணமாகின்றன; ஐய, கொற்றரே, உம்முடைய கஷ்டத்திற்கு இவைதாம் காரணமாகின்றனவோ?'' என்று தனித்தனி வினவுவோமாயின், உலகாநுபவமுதிர்ந்த அறிவுடைய டாக்டர் ஜான்ஸன் கூறியவண்ணம் அரசியலமைப்பிற்கும் அவரவர் சுகதுக்கங்களுக்கும் எள்ளளவும் தொடர்பில்லை என்பது இச்சாத்தனுங்கொற்றனும் தருகின்றவிடைகளினின்று தெளியுமொரு உண்மையாகும். சுகதுக்கமென்னு மிவைகளை இன்பதுன்பங்களோடுமயங்கலாகாது. இன்பதுன்பங்களென்பன அவ்வப்போது புறத்திலிருந்து தூண்டப்பெற்றுத் தினைப்பொழுதுந் தங்காமல் மாறியும் மறைந்தும்விடும் தன்மைகள். சுகதுக்கங்கள், மனத்திற் பிறந்து மனத்திற்றங்கி அம்மனத்தினின்று புறத்தே பரிணமிக்கும் தன்மை வாய்ந்தன. பசித்தவயிற்றிற்கும் சுகித்தமனத்திற்கும் யாதோர் தொடர்புமில்லை. இன்சுவையுணவை நுகர்ந்தவாங்கே கைத்தமனத்தினர் கணக்கிலர். அமரர் வாழ்க்கையும் அல்லலேயுடையதன்றோ! இங்குரைத்த அவ்வளவும் இந்திய சாத்தனுக்கும் இந்திய கொற்றனுக்கும் ஒக்கும் என இயம்புவதும் மிகை.

இதனுண்மையை முடிவுறச் சோதிப்பதற்கு அவரவர் நெஞ்சினும் உரிய கருவி வேறில்லை. அந்நெஞ்சானது நடுநின்று கூறும் சான்று யாது? "ஒன்றைவிட்டொன்றைப்பற்றிப் பார்த்ததெல்லாம்போதும்இனிச் சும்மாவிருப்பாயாயின் அதுவே சுகம்'' என்பதல்லால் வேறு யாதேனும் எவர் நெஞ்சமேனும் உரைத்ததுண்டோ. பேயான புன்மனம் இதனிற்கு எளிதில் இணங்குவதில்லை என்பது உண்மையே. எனின் மனம்போன போக்கெல்லாம் போப்படி செய்வதும் செய்விப்பதுந்தான் முறையென் றெண்ணில் பிழையன்றோ! "பாழான வென்மனங் குவியவொரு தந்திரம் பண்ணுதல்'' வேண்டுமென்றும், "மனதற்ற பரிசுத்த நிலையை அருளல்'' வேண்டுமென்றும் இறைவனை வேண்டிவேண்டிச் "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறத்தின்'' அருமையை விளம்பிய தாயுமானவர் ஒவ்வொருவர் நெஞ்சிலும் உள்நின்று உய்க்கின்ற நெறியையே திருவாய்மலர்ந்தருளினர்.



இவ்வண்ணம் புறச்சான்றுகளும், அகச்சான்றும், ஆன்றோர் மொழிகளும், அமைதியை நாடுகின்ற நாட்டமொன்றே உண்மையான நன்மைநெறி யுய்ப்பதென அறிவுடையோரை ஒருமுகப் படுத்திநிற்க அதற்கு மாறானவைகளைப்பற்றி யுழல்வதால் தனக்கேனும் பிறர்க்கேனும் சுகம் என்பது எங்ஙனம் வந்து சேரும். மனதின் அமைதியிலேயே நமது நாட்டம் நிலைத்திருக்கவேண்டும் என்று இயம்புவதால் யாவரையும் ஒருநொடியில் மோனநிலை முத்தர்களாய் மாற்றிக்கொள்ளச் சொல்கின்றோ மென்று எண்ணவேண்டா. அது இயலுமாயின் வேண்டற்பாலது வேறில்லை. எனினும், அதன் அருமையை அறியாமலும் ஈது இங்கு இயப்பலாயிற்றன்று. இவ்வமைதியைக் கலைக்கின்றவைகளால் சுகமில்லையென்பதையேனும் முதற்படியாய்த் தெரிந்துகொள்ளலாமே. சுயநயமின்றி மற்றவர்களுடைய துயரங்களைத் தீர்த்து அவர்களுக்குப் பொதுஜனவாழ்க்கை முறைகளால் சுகம் விளைவிக்கவேண்டுமென்று பல்வேறுவகைகளில் முயல்கின்ற உத்தமகுணமுடைய மேன்மையோர் அனைவரும் தங்கள் சுகத்திற்குத் தனிமுதல் காரணமாயிருப்பது மனத்தின் அமைதியே என்பதை அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் கல்வி கேள்விகளாலும் தேர்ந்துகொண்ட அறிவினர் ஆவாராயின் அவ்வமைதிக்கு அயலானதொன்றையும் மற்றவர்பால் இயற்றிவைக்கமாட்டாமை திண்ணம். இதற்கெதிர், தாமும் பிறரும் கூடியவரையில் இச் சாந்திநிலையை எய்துதற்குரிய முறைகளையே முயல்பவராவார். இம்முயற்சியின் பயனாய் முன்னுரைத்தபடி முற்றிய மோனநிலை அனைவர்க்குமே கைவராவிடினும் அவ்வவர் அடைந்த அமைதிக்கேற்ற அளவு நன்மையும் சுகமும் வாய்க்கவே வேண்டும். அமைதியின் இடையே யன்றி நற்கருமங்கள் நிகழ்வதில்லை அல்லலுற்றலையும் மனமுடையார் தமக்கேயன்றித் தம்மைச் சூழ்ந்துள்ளவர்களுக்கும் துயரேதவிர வேறு யாது இயற்றிவைக்க இயலும்?

இன்னவாறு நாம் வற்புறுத்தி வேண்டுகின்ற அமைதியை அளிப்பது ஆன்மதத்துவம். கவி இரவீந்திரநாதர் ஸ்ரீ அரவிந்தரைத் தரிசிக்கச் சென்ற நாள் தன் மனத்தே எழுந்த எண்ணங்களை உலகத்திற்குதவிய செவ்வியில் இயம்பியவண்ணம், ஆன்ம உணர்ச்சி வளரவளர அமைதியும் வளர்ந்துவரும் பெற்றிய ராவோம். அப்பொழுதே அகமும் புறமும் இகலின்றி இணங்கி வாழும். இவ்விணக்கமின்றி எய்திய வொவ்வொன்றும் பகையின் தொகுதியைப் பெருக்குமே யல்லாமல் நட்பின் நயமுடன் உலகவகை தெரிந்து அன்பினது இன்பத்தின் அமைதியை அடைதற்கில்லை. சட்ட நிர்மாணங்களும் அரசியல் முறைகளும் சனங்களின் தகுதிக்கேற்றபடி தாமே அமையும் என்பார் எமர்ஸன். இதற்கிடையில் மாட்டுவண்டியை வண்டிமாடாக்கும் முயற்சியில் முழுகாமல், காவியமனைய கலைகளை கைதர, ஆன்ம நினைவிற்கும் அருட்பெருங் கடவுளிற்கும் ஆளாகும் வகையினை நாடி நிற்றலே நலம்.

# மாதவி மாதவம்

[527-வது பக்கத் தொடர்ச்சி.]

## 5. யாழ்க்கருவி இடைநின்று ஊழ்வினையை உறுவித்தமை.

பின்னர் மாதவி தன் னருகில்நின்ற வயந்தமாலையின் கையதாகிய குற்றமற்ற யாழினைத் தொழுது வாங்கி அதன் நரம்புகளை முறுக்கி, மாகதமணி மோதிரங்கள் செறிந்த தனது மெல்லியவிரல்களால் அவற்றை நிரலே தெறித்து, அதுபொழுது உண்டான இசைக்கூறுபாடுகளைத் தன் செவியால் ஊன்றிக்கேட்டுணர்ந்து, யாழைத்திருத்தித் தான் வாசியாமல் கோவலன் கையிற்கொடுத்து "காதல! இதனை வாசியென்று யான் உன்னை யேவுகின்றே னல்லேன்; மற்று,இதனை வாசிக்குந் தானம் யாதென்றறிய விழைகின்றேன்'' எனக் கூறினாள். அவனுமதை அன்பொடு வாங்கிப் பாடத்தொடங்கினன்.

முதலில் காவிரியாற்றைக் குறித்துப்பாடுகின்றான்:-

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

[முழுமதிபோன்ற செவ்விய வெண்கொற்றக் குடையையுடைய உன் கணவனாகிய சோழன் உன்னொடு நில்லாது, மற்று அயலாளாய கங்கையொடு கூடி அவள்நலம் துய்த்துநிற்கினும் நீ ஊடல்செய்யாய்; அங்ஙனம் நீ ஊடாது நிற்றல் பெண்கட்கு இயல்பாயுள்ள கற்பின் பெருமையாலேயே; காவேரி! யான் அதை யறிந்துள்ளேன்; நீ வாழ்வாயாக.]

உழவ ரோதை மதகோதை
யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி! காவேரி!
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த தெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன்
வளனே வாழி! காவேரி!

[உழவர் ஒலியும், மதகினின்று எழும் ஒலியும், கரையை யுடைத்துச்செல்லும் நீர்ப்பெருக்கின் ஒலியும், புதுப்புனலாடுவார் ஒலியுமே எங்கும் சிறந்து மிகச் செல்லும் காவேரி! நீ இங்ஙனம் நடப்பதெல்லாம் உனது தலைவன் சோழனுடைய வளத்தினாலேயன்றோ? அப்பேறு பெற்ற காவேரி! நீ வாழ்வாயாக.]

சோழன் கங்கையாறு பாயும் நாட்டையும் தன்னடிப் படுத்தினின்றான்; எனின், அக் கங்கையாற்றின் திறத்தின் ஒருசிறிதும் பிற்பட்டாயல்லை நீ; அச்சீரியல்புடைய காவேரி! நீ வாழி! என்னுங் கருத்தைக் கோவலன் மொழிந்திருக்குந் திறம்; அவன் உண்மையிலேயே காவிரியைக் குறித்துக் கூறியிருப்பினும், அஃது அவன் பேதைமையென்றோ ஊழ்வினை யென்றோதான் நாம் இரங்கும்நிலையில் அமைந்துளது. பெண்கள் இயற்கையாகவே யாதொரு ஏதுவுமின்றித் தம்காதலரிடத்து ஊடமுயல்வர். கொழுநன் தும்மிய பொழுதும், அதனை யடக்கமுயன்றபொழுதும், தன் காதலியிடத்துப் பட்டபாட்டைத் திருக்குறளிற் கண்டுள்ளோம். அங்ஙனமாக இவன்கூற்று மாதவி ஐயுறும்வகையில் அமைந்துள தென்பது வெளிப்படை. யாங்ஙனமெனின், காவிரியை மாதவியாகவும், கங்கையை மற்றொரு மங்கையாகவுங் கொண்டு, "மாதவி! யான் உன்னையன்றி மற்றொரு மாதைக் காதலித்துக் கூடினும், நீ யென்னை வெறுத்தல் செய்யாய்; அஃதெதனாலெனின், பெண்கள் இயல்பிலேயே பொறுங்குணமுடையாரன்றோ? அதுவுமன்றி, காதலி! நீ அணியாலும் பிறவாலும் சீரும் பேரும் பெற்றதெல்லாம் என்னுடைய செல்வத்தினாலேயன்றோ? அதனை நீ யென்றும் மறந்தொழுகாய்" எனவொரு குறிப்புப் பொருளும் தந்துநிற்கின்ற தன்றோ? மற்றுக் கண்ணகியைக் குறிப்பதெனின் வேறொருபொருளுங் காணலாம். வெண்மணல் பரந்த தண்ணறும் பொழிலில் மயிலியற் சாயல் மங்கையரும், அயில்வேற் குமரனன்ன ஆடவரும், மற்றப் பகுத்தறிவில்லாப் பறவைகளுங்கூடத் தத்தம் துணையொடுகூடி ஆடிப்பாடி மகிழ்வதைக் கண்ட கோவலன் "அந்தோ! என் ஆருயிர்ச் செல்வி, அரும்பெற லணங்கு, தேவரும் யாவரும் களிசிறந்து உளமகிழும் இவ்விழாச்சிறப்பிலே கலவாது தனித்துயருறுதற் கேதுவானேனே; ஆ! எளியனைக் குறித்து எவ்வெவ்வகையில் நொந்து நைகின்றனையோ?" என வருந்தி அவளுடைய சீர்மையையெடுத்து, "கண்ணகி! எளியேன் உன்னைப் பிரிந்து மாதவியொடு கலந்துவாழினும், என்னை நீ வெறுத்தொதுக்க மாட்டாய்;" "மற்று, உன் அளப்பரிய அருங்குணத்தால் வரும் கீர்த்தியாவும் உன் கொழுநனாகிய எனக்கும் உரியதே யன்றோ? என் ஆருயிரே! வாழி!" எனக்கூறும்வகையிலும் பொருள்தந்துநிற்றல் அறிதற்பாலது. ஆனாலும், கோவலன் கண்ணகியை நினைத்துக் கூறியதாக நாம் கொள்வதற்கில்லை. நெஞ்சத்து எவ்வகை யழுக்குமின்றி, "அன்ப! எந்நெறி பற்றி வாசிப்பது என்பதை அடிச்சிக்கு அறிவி" என மாதவி யாழைநீட்ட நல்வினையில்லாக் கோவலன் தன் குறும்புமதியைக் காட்டத்தொடங்கிவிட்டான். "திங்கண்மாலை" யென்னும் முதற்பா மாதவிக்கு அத்துணைத் துன்பந் தருவதன்று; மற்று "உழவரோதை" யென்னும் பாவே அவளது நெஞ்சைச் சிறிது நடுக்குவித்திருக்கும்.

மோதுமுது திரையான் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்டல்
உழுதழிப்ப மாழ்கி ஐய!
கோதை பரிந்தசைய மெல்விரலாற்
கொண்டோச்சுங் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
போகாப் புகாரே யெம்மூர்.

[மோதுகின்ற முதிய அலைகளினால் எற்றுண்டு, அதனால் கரையிடத்தே வந்து அசைந்தனவாகிய ஒலிக்கின்ற வாயையுடைய சங்குகள், பெண்கள் மணலின்மேல் இழைத்த சிற்றில் முதலியவற்றை உழுது அழிப்ப, அம்மகளிர் அது பொறாது மனம் வருந்திக் கூந்தல் அவிழ்ந்து அலையும்படி தாம் அணிந்துள்ள மாலையின் குவளைமலர்களை யெடுத்துத் தமது மெல்லிய விரல்களால் அச் சங்குகளின்மீது எறிந்து ஒட்டியதால்சிந்திக்கிடந்த குவளைமலர்களைத் தமக்குச் சாடைகாட்டி யழைக்குங் கண்களென்று அவ்வழிச் சென்றோர் எண்ணத் தம்முடையகண்கள் அவைகளை விட்டு நீங்காமல் அவ்விடமே நின்றுவிடுகின்ற செய்தியையுடைய புகாரே எமது ஊர்.]

தோழியிற்கூட்டம்பெற்ற தலைமகன் வாராவரைவலென்றாற்குத் தோழி கூறியமுறையிற் பாடியுள்ளான் கோவலன். காவிரியை வாழ்த்துவதுபோலப் பெண்களின் கற்புநெறியைப் புகழ்ந்த கோவலன் இங்கு ஆடவர்களது நிறையின்மையைக் காட்டி, அதனால் அவர்கள் தவறுடைய ரல்லரென்றும், நிறையுடைமை ஆண்மக்கட் கில்லையென்றும் சாதிப்பான் போல் அமைந்துளது இக்கவி. "ஒருவன் தனது முழுஅன்பையும் ஒருத்தியிடத்தே காட்டாது, பல மகளிரிடத்துப் பகிர்ந்துகாட்டினும், அம்மகளிர் அனைவரும் தத்தம் அன்பின் முழுஅளவையும் அவ் வொருவனிடத்திலேயே செலுத்தல்வேண்டும்" என முன்னர்க்கூறிய பாக்கட்குப் பொருள்கண்ட மாதவி இப்பாவிற்கு "ஆடவர்மனம் பலமகளிரையும் பற்றி நிற்றல் வியப்பொன்று மன்று; குவளைமலர்களைக் கண்ணுற்று, அம்மாதரார் தம் கடைக்கணிக்குங் கண்களோ இவையென மயங்கிநிற்குங் காளையர் நிறைந்த வூர் இப் பூம்புகார்; அங்ஙனமாக, உண்மையில் ஒரு பெண்ணினல்லாளைக் கண்ணுற்று மனம் மாழ்கின் அதுபொருட்டு என்னை வேறாக நினைத்தல் தகாது" எனத் தன் உட்கோளைச் சிறிதே வெளிக்காட்டத் தலைப்பட்டுள்ளான் கோவலன்என்றுகொண்டனள்.

நிணங்கொள் புலாலுணங்கல்
நின்றுபுள் ளோப்புதல் தலைக்கீ டாகக்
கணங்கொள்வண் டார்த்துலாங்
கன்னி நறுஞாழல் கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானல்
மன்னிமற் றாங்கோர்
அணங்குறையு மென்ப தறியேன்
அறிவனேல் அடையேன் மன்னோ.

[புட்களையோட்டிப் புலால்வற்றலைக் காத்தலை ஒரு யேதுவாகக்கொண்டு கூட்டமாக வண்டுகள் ஆரவாரித்து மொய்க்கும் சிறந்த ஞாழல்கிளையைக் கையிலேந்தி, மணம்விரியும் பூக்கள்மலிந்த கடற்கரைச் சோலையிலே, எளியேன் நெஞ்சைக் கவர்ந்து துயரூட்டும் ஓர் தெய்வப்பெண் உறைவாளென்பதை யறியாமற்போனேன். அறிவேனேல் யான் ஆண்டு அடையேனென்ப துறுதி.]

காவிரியாற்றைக் குறித்து அவன் பாடிய பாக்களே மாதவியின்மனம் ஐயுறுமாறு அமைந்திருந்தனவெனின், பின்னிவன் பாடிய கானல்வரிப்பாக்கள் மாதவியின்நெஞ்சுமுற்றிலும் வேறுபடுதற் கேதுவாகநிற்கின்றனவென்பது வெளிப்படையாம்.



தலைமகனது வேறுபாட்டையத் தலைமகன் உற்றதுரைத்தமையா லறிந்த பாங்கன் "நினக்கிது தகுமோ?" எனக்கழற, அதற்குத் தலைவன் அவன் கூற்றை மறுத்துரைக்கும் வகையில் அமைந்துளது இக்கவி. "கானல்வரி யான் பாடுகின்றேனே யன்றி, வேறெவ்வகை நினைவும் என்பாலில்லை" யெனக் கோவலன் தானே தன் நெஞ்சொடு கூறிக்கொள்ளலாமன்றி, கட்டழகுடைய காரிகையார் பலர் திரிதருமக்கானலிலே, அவன் அவ்வகைப்பாக்கள் பாடினனெனின், பேதை மாதவிகிடக்க, நாம்தான் என்ன நினைப்போம்? தன தின்னுயிர்த் துணைவியாங் கண்ணகியாரை முற்றிலு மறந்து, சிற்றின்பத்திற் கெனமாதவியையடுத்த இந்தக்கோவலன் இவளினும் அழகிய வேறொருத்தியைக் காணின் இவளையுந்தான் துறந்து அவளை விழைவன் என நாம் கொள்ளவியலாதென்பதற்கு ஏது யாது மின்றே? அவன் அங்ஙனம் விழையாவிடினும், மாதவி அதன் அநுபவத்தால் அவ்வாறையுற்றாள் எனின் அதனால் நாம் அவளிடத்தில் தவறுகாண வியலாதன்றோ? கோவலன் மனத்து யாதோர் அழுக்குமின்றிக் கூறினதாகவே நாம் கொள்ளினும், மற்றுத் தன்காதலி மனம்நைவதைக்கண்டு நகைக்கத்தான் இங்ஙனம் விளையாட்டயர்கின்றானோ என நாம் ஊகித்தல் தவறாகாது. எங்ஙனமாயினும் இவ்விளையாட்டே வினையாக மாறுவதைப் பின்னர்க் காண்போம்.

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்!
திங்களோ காணீர்! திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே.

[கயல், வில், கார் எனுமிவற்றை முறையே கண், புருவம், கூந்தலாக வியற்றி, பிறரை வருத்துந்தொழிலில் தேர்ச்சிபெறச் செய்து, பணிக்குறையற்றுக் கைவிட்ட இம்முகம் திங்களோ காணீர்! மற்று, அத்திங்கள் வானத்தரவை யஞ்சிப் பரதருடைய சீறூரில் வாழ்வதைக் காணீர்!]

இது தலைவியைக்கண்ட தலைமகன் கூற்று. "அங்ஙனம் மயலூட்டித் துயருறுத்தும் அவ்வணங்கால் மதிபிறழ்ந்த கோவலன் அம்மங்கையின்முகத்தைத் திங்களோபார்மின்!" இராகுவெனும் அரவிற்கஞ்சிச்சேரியிற்றிரிதரும் திங்களோ பார்மின்!" எனப் பொருள்கொண்டு மாதவிமனம் மாழ்கும்வகையில் இப்பா அமைந்துளதென்பது வெளிப்படை. அவன் சொற்றிறம் நம்மனோர்க்கு வியப்பூட்டினும், அஃது அவன் காதலிக்குத் துயரூட்டுமே யென்பதைச் சிறிதும் ஓர்ந்திலன்.

வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவள் திரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
இளவள ரிணைமுலையே யெனையிடர் செய்தவையே.

[எனது ஊனையும் உயிரையும் உருக்கி இடர் செய்தவை சங்குகள் ஊர்கின்ற கடல்துறை, மணம் விரிந்த சோலை, நறிய மலர், ஒப்பற்ற அவள் திரிந்த இடம், அவளது அழகிய நகைமதியொக்கு முகம், இளமுலைகள், ஆகும்]

இது, தலைமகன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணத்தைப் பாங்கனுக்குக் கூறுதல். "கண்டாரை வருத்தும் தெய்வப்பெண்போன்ற அம் மங்கையைக் கண்டேனாதலின், எனக்கும் அந்நிலையுற்றதென்பதை இதனால் நன்கு குறிப்பிடுகின்றான் கோவலன்" எனக் கருதினள் மாதவி. தன் நெஞ்சினைக்கவர்ந்த அச் செல்வி புனலாட்டயர்ந்து பொழிலிற்றிரிந்து நறுமலர்சூடிய தன்மையால், அவைகளைக் காணுந்தோறும் அவள் நினைவே மிக்கு, அதனால் அவள் சேர்க்கையைப்பெற்ற துறை பொழில் மலர் இவைகளின் மீது அழுக்காறுற்று, அவையும் தனக்கு இடர் செய்தன என்று அகப்பொருள்துறையில் கோவலன் கூறிய இது, பரதன் தனது முன்னோனைத் தேடி வனம்நண்ணி, ஆங்கே குகனிடத்து "எனது அண்ணன் உறைந்த இடம் யாது? அவர் உறங்கியது யாண்டு? எனது முன்னோற்கும் பின்னோன் ஒருவன் உளனென்பதை யுலகோர்க் குணர்த்திய இலக்குமணன் இருப்பு எங்கே?" என வினவி, அவற்றைக் கண்ணுற்றது மவர்களையே நேரிற்கண்டாற்போன்று விம்மியழுத காட்சியை நம் மகக்கண்முன் தோற்றுவிக்கின்றது.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[531-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour).

நரப்பத்தொடர்பு:—உணவைக் கண்டால் நாய்க்கு நாவில் நீரூறி நிற்கின்றது; பழக்கத்தால், பின்னங்காலைத் தட்டினாலும் நாவில் நீரூறி நிற்கின்றது எனக் கண்டோம். நாவில்நீரூறுதலும் பின்னங்காலைத்தட்டுதலும் எவ்வாறு தொடர்புபெற்றன ? ஒருமுறை தொடர்புண்டால், அது பழக்கமாம் என்பதை யுணர்ந்தோம். ஆனால் அவை முதன்முறை ஏன் தொடர்புண்டன. பல நூறுநூறான புலனரப்பங்களும் இயக்க நரப்பங்களும் உடலில் இருக்கின்றனவே. இவற்றில் இவ்விரண்டு மட்டும் இந்நிலையில் தொடர்புண்பதேன் ?

மாலைக்காலத்தே தனது குழந்தையுடனே தந்தையார் கடற்கரையில் உலாவச்சென்றார். கடலில் புகைக்கப்பல் ஓடியது. குழந்தை விருப்போடும் அதனைப் புதுமைக்கண் கொண்டு கருத்தாகப் பார்க்கின்றது. தகப்பனார் குழந்தையின் நாட்டத்தைக் கண்டு "அது தான் கப்பல்" என எடுத்து விளக்குகின்றார். மறு வெள்ளிக்கிழமை கடலோரத்திற்கு வந்தவுடன் மற்றொரு கப்பலைக் கண்டதும் கப்பல் என்ற பெயர் அக்குழந்தையின் நினைவிற்கு வருகிறது. கப்பலின் காட்சியும் பெயரின் கேள்வியும் ஒன்றாக இணைந்துவிட்டன. கப்பலைக் கண்டபோது கட்புல நரப்பவழியாக

முன்றலை மூளையில் (Cerebrum) உள்ள கட்புல எல்லையில்உள்ள நரப்பங்கள் கிளர்ச்சியுறுகின்றன. கப்பல் என்ற பெயரைக் கேட்டபோது முன்றலை மூளையிலுள்ள செவிப்புல எல்லையிலுள்ள நரப்பங்கள் கிளர்ச்சியுறுகின்றன. கண்நரம் பமைப்பிற்கும் செவிநரம்பு அமைப்பிற்கும் ஒருதொடர்புஉண்டாயதால் அன்றோ கப்பலின்காட்சி அதன்பெயரை நினைப்பூட்டுகின்றது. இவ்விரண்டிற்கும் இடையே ஒரு கால்வாயோ இருத்தல் வேண்டும். ஒருமுறை தடை நீங்கித் தேய்ந்த வழியாய் எழுந்து, பின் பழக்கத்தால் நிலைபேறடைகின்றது. ஆனால் முதலில் இவை தொடர்புபெற்ற தெங்ஙனம்?

கப்பலைக் கண்டபோது அலைகளின் ஒலியும், கடற்கரையின் வீச்சுநாற்றமும் அயல்நின்றார் பேசிய பல சொற்களும் அலை வீசிய நீர்த்துளி நாவில் பட்டதால் எழுந்த உப்புச்சுவையும் புலனாயிருக்குமன்றோ? கப்பலின் காட்சி இவற்றோடோ, இவற்றில் ஏதேனும் ஒன்றோடோ தொடர்புண்ணலாம் அன்றோ? அங்ஙனமின்றிக் கப்பலின் காட்சியானது கப்பலென்ற பெயரோடு இயைந்தது எங்ஙனம்? முன்றலை மூளையில் இணைப்பெல்லை (Association area) உண்டெனக் கண்டோம். அதில் எண்ணற்ற நரப்பங்களும் கூடல்வாய்களும் உள்ளன. அவற்றில் பல நரப்பங்கள் கூட்டம்கூட்டமாக் கூடித் தனித்தனி யமைப்புக ளாகின்றன. பின்னர் இத் தனித்தனி யமைப்புகளும் ஒன்றோடொன்று உயர்நிலைத்தொடர்பு பெறுகின்றன. எழுத்துக்கள் சொற்களாய்க்கூடிப் பின் அச்சொற்கள் சொற்றொடர்களாகக் கூடுவதுபோல இவையும் சிறுபிரிவும் பெரும்பிரிவு மாகக் கூடி விளங்குகின்றன. இளமையில் இத்தொடர்புகள் குறைந்தே காணப்படுகின்றன. நரப்பங்கள் எண்ணற்றன ஆயபோது, ஒரு நரப்பத்தொடரோடு மற்றொரு நரப்பத்தொடரும் இயையும் வழிகளும் எண்ணற்றனவாகும் அன்றோ? அங்ஙனமாக எண்ணிலாதபல வழிகளைவிட்டுக் கட்புல எல்லையிலிருந்து செவிப்புல எல்லையில் நரம்புக்கிளர்ச்சி பாய்வது எங்ஙனம்?

**கருத்துப் பாய்தல்:**-கப்பலைக் கண்டபோது கண்ட அலைகளும், கேட்ட ஒலியும், முகர்ந்த நாற்றமும், சுவைத்த சுவையுமெல்லாம் புலனளவாக நின்றுவிட்டன. கப்பலின் காட்சியொன்றே உணர்வாகிக் காட்சிப்பொருள் ஆயிற்று. மற்றவை யெல்லாம் மனமெனும் வெட்டவெளியின் எல்லைப்புறத்தே நின்றுவிட்டன. ஆதலின், அவை எல்லைப்புறப் புலன்கள் (Marginal Sensations) எனற்பாலன. கப்பலின் காட்சியோ நடுநிலையாயிற்று. அதில் கருத்தூன்றியது. அதைத்தான் கருத்தாகக் கண்டான். மற்றையவற்றைக் கருத்தாகக் காணவில்லை. கருத்தாகக் கண்டபோதன்றோ காட்சிப்பொருளாகும். கருத்தாகக் காணப்படும் (Attention) காட்சிப் பொருள்கள் (Object) உணர்வாக (Perception) உணரப்பெற்றபோதுதான் இயைபு பெறுகின்றன. கப்பல் என்ற பெயரைக் கேட்டபோது அக் கேள்விப்பொருளும் கருத்தாகக் கேட்கப்பட்டு உணர்வாயது. ஆதலின் அக்காட்சியும் அக்கேள்வியும்மட்டும் இயைந்தன. மற்றவை ஒன்றாக இயையவில்லை. நம்முடைய கருத்து (Attention) ஒரு காட்சிப்பொருளினின்று மற்றொரு காட்சிப்பொருளின்கண் பாய்ந்தால்தான் அவற்றின் தொடர்பு உண்டாகின்றது. (105-ம் ஏட்டில் புலனுதற்கும் உணர்தற்கும் உள்ள வேற்றுமை சுட்டப்பட்டிருத்தலை நினைவில் வைத்தல் வேண்டும்) கையில் கடலையை வாரித் தரையில் இறைக்கின்றேன். விழுந்தவை ஏதோ ஒரு வடிவாக அமைந்து கிடக்கின்றன. சிறிதுபொழுது அவற்றின் வடிவையும் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடைநின்ற இடவளவையும் மனத்தகத்தே எழுதிக் காணமுடியுமா? முடியாது. நான், இருபது கடலைகளை இறைத்துள்ளேன். அவற்றை நந்நான்காகவோ ஐந்தைந்தாகவோ வேறுபிரித்துத் தனித்தனி வடிவமாக்கி அவற்றை ஒவ்வொன்றாக ஊன்றிப் பார்த்தால் இறைந்த கடலைகளின் வடிவமுழுதும் நமது மனத்தில் பதிகின்றது. வடக்கே நின்ற ஐந்து கடலைகளை ஒரு வடிவமாக்கி ஊன்றிப் பார்க்கின்றேன். அக் கருத்துநாட்டத்தால் அவ்வடிவம் என் மனதில் நன்கு பதிகின்றது. பின்னர்க் கிழக்கில் உள்ள ஐந்து கடலைகளை ஒரு வடிவமாக்கிக் கருத்தாகப்பார்க்கின்றேன். அப்பொழுதுமற்றவை எல்லாம் எல்லைப்புறப் புலனாகின்றன. பின்னர்த் தெற்கிலுள்ள ஐந்துகடலையையும் அதற்குப்பின் மேற்கிலுள்ள ஐந்து கடலையையும் ஊன்றிப்பார்க்கிறேன். தனித்தனியாகக் கண்டறிந்த பின்னர்க் கிழக்கிலுள்ளதையும் வடக்கிலுள்ளதையும் யாற்றிமாற்றிக் கருத்தாகக் கண்டு அவ்விரண்டுவடிவையும் ஒருவடிவமாக உட்கொள்ளுகிறேன். அங்ஙனமே தெற்கிலுள்ளதையும் மேற்கிலுள்ளதையும் மாற்றிமாற்றிக் கருத்துடன் நோக்கி அவற்றையும் ஒன்றாக உள்ளத்தே எழுதுகின்றேன். கடைசியாக இவற்றையெல்லாம் ஒன்றாகநோக்கி ஒருவடிவமாக உட்கொள்ளுகிறேன். இப்போது கீழ்வீழ்ந்த கடலைகளின் வடிவை யுணர்கின்றேன். முதலில் எழுத்துக்கூட்டிச் சொல்லாக்கிப் பின்னர்ச் சொற்களைக்கூட்டிச் சொற்றொடர்ஒன்றை மனதில் வைக்கும் சிறு குழந்தைகளும் இங்ஙனமே செய்கின்றன. ஐந்தைந்தாகப் பிரிக்கப்பட்ட வடிவங்களில் ஒன்றிலிருந்து ஒன்றில் நமது கருத்துப் பாய்ந்து அவற்றினிடை ஒரு தொடர்பை உண்டாக்கியபோதுதான் அவை முழுதையும் உணர்கிறோம். ஒவ்வொருவரும் கடலையையோ வேறு பருப்பையோ கீழ் இறைத்து இவ்வுண்மையைச் செய்காட்சியால் கண்டறியலாம். இவ்வாறுதான் ஒவ்வொரு பொருளின் உணர்வும் விளக்கமாக உண்டாகின்றது. பொருளின் பிரிவுகளைப் பல உணர்வமைப்புகளாக வேறுபடுத்திக் கருத்தை மாற்றிமாற்றி ஊன்றப்பார்த்துத் தனித்தனியே யுணர்ந்து பின், அவற்றை ஒன்றுசேர்த்துத் தொடர்புபடுத்தினால்தான் நாம் உணர்ந்த பொருளை மனக்கண்ணாடியில் பார்க்கமுடியும்.

**இணைப்பு இயையும் இயல்பு:**-நம்முடைய கருத்துநாட்டமானது ஒன்றிலிருந்தொன்றில் திரும்புவதே நரம்புத்தொடருக்குக் கடைக்காலாகும். கப்பற் காட்சியிலிருந்து அக்குழவியின் கருத்துக் கப்பல் என்ற பெயரின் கேள்வியிற் பாய்ந்தது. கப்பல் என்ற பெயரைக் கருத்தாகக் கேட்டபோது கப்பலின் காட்சியில் கருத்துச் செல்லவில்லை; அது எல்லைப்புறப் புலனாகநின்றது. கப்பலைக்கண்டபோது கண்வழியாக எழுந்த நரம்புக்கிளர்ச்சி முன்றலைமூளையில் உள்ள கண்புல வெல்லையைச்சேர்ந்த நரப்பங்களில் பாய்கின்றது. இந்நரப்பங்கள் ஒன்றோடொன்று கீழ்நிலை



வட்டமாகத் தொடர்பு பெறுவதோடு, இக் கீழ்நிலைத் தொடர்புகள் ஒன்றோடொன்று இணைந்து உயர்நிலை வட்டமாகத் தொடர்பு பெறுகின்றன என்று கண்டோம். இணைப்பெல்லையில் (Association area) இவ்வுயர்நிலை வட்டங்கள் விளங்குகின்றன என்றும் கண்டோம். கப்பலின் காட்சியால் உயர்நிலை வட்டங்களும் கிளர்ச்சியுறுகின்றன. கப்பல் என்ற பெயரைக் கேட்டபோது செவிவழியாக எழுந்த நரம்புக்கிளர்ச்சி அங்ஙனமே மூளையின் செவிப்புலன் எல்லையிலுள்ள நரப்பங்களைச் செயலுறுத்துவதோடு அதற்கேற்ற உயர்நிலை வட்டங்களையும் கிளர்ச்சியுறச் செய்கின்றது.

ஒரு புலனரப்பம் இணைப்பநரப்பங்கள் வழியாகச் சென்று இபக்கநரப்ப வழியாக வந்து ஒருறுப்பில் முடிந்து இயக்குவதனைக் கண்டோம். ஊன்றல் எதிரூன்றலாக இத்தொடர்பு முடிகின்றது. இதனையே ஒரு நரம்புவட்டம் என்பது. கண்ணெதிரே கையைத் திடீர் எனக் கொண்டுவருகின்றீர். என் இமை மூடிக்கொள்கிறது. இஃதொரு மடக்கு. இங்கே கீழ்நிலை வட்டமே காணப்படுகின்றது. ஆராய்ச்சிசெய்து ஒரு வேலையை முடிக்கவேண்டுமானால் உயர்நிலை வட்டங்கள் இயங்குகின்றன. ஒரு கோட்டையை முற்றுகையிட்டு வெல்வதென்றால் எத்துணை எண்ணங்கள் படைத்தலைவரின் மனதில் எழுகின்றன. அவற்றில் தக்கதை ஆராய்ந்து செய்கின்றார். பல எண்ணங்களும் தொடர்புண்டு எழுந்ததால் அன்றோ அவ்வாராய்ச்சி இயலுவதாயிற்று. ஆதலின் அவ்வாறு தொடர்புண்டு கிடக்கும் உயர்நிலை வட்டங்களும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. இது நிற்க. கப்பல் என்ற பெயரைக் கருத்தாகக் கேட்கிறான் குழந்தை. முன் கப்பலைக் கருத்தாகக் கண்டபோதும் கப்பல் என்ற சொல் காதில் விழுந்தது. ஆனால் அஃது எல்லைப்புறப்புலனாக நின்றது. காதுவழியாகச் சென்று மூளையின் செவிப்புல வெல்லையிலுள்ள நரப்பங்களை இயக்கியது. ஆனால், அதைக் கருத்தாகக் கேட்டபோது மூளையின் செவிப்புல வெல்லையில்மட்டும் நில்லாது உயர்நிலை மூளையின் வட்டங்களில் அக்கிளர்ச்சி சென்று பாய்கிறது. செவிப்புலனெல்லையோடு தொடர்ந்த உயர்நிலை வட்டங்களில் கிளர்ச்சி பாயும்போது, கட்புல வெல்லையினின்றெழுந்து உயர்நிலை வட்டங்களில் பாய்ந்த கிளர்ச்சி தடையுறுகின்றது. அப்போது கப்பற்காட்சி புலனளவாக எல்லைப்புறத்தே நிற்கின்றது. கருத்துநாட்டம் மாறுவதாலோ, தூண்டலின் வலிவாலோ, நரம்புக்கிளர்ச்சி மடைமாறிப் பாய்வதை முன்னரே காண்கிறோம் அன்றோ? அதன்படியே இங்கும் கட்புல உயர்நிலை வட்டங்களில் பாய்ந்த நரம்புக்கிளர்ச்சியும் கருத்துநாட்டம் வேறுபட்டதால், செவிப்புல உயர்நிலை வட்டங்களில் பாய்கின்றது. அவ்வாறு கட்புல உயர்நிலை வட்டங்களிலிருந்து செவிப்புல உயர்நிலை வட்டத்தில் பாயும்போது ஒரு வழியை ஏற்படுத்திக்கொள்கிறது. அவ்வழி அவ்வகையில் கப்பலின் காட்சியையும் கப்பலின் கேள்வியையும் ஒன்றாகத் தொடர்புபடுத்தி விடுகின்றது. மற்றொருமுறை கப்பலைக் கண்டபோது கட்புல உயர்நிலைவட்டத்தில் பாயும் நரம்புக்கிளர்ச்சி முன்னைய பழக்கத்தால் முன் பாய்ந்த கால்வாய்வழியாக ஓடிச் செவிப்புல உயர்நிலைவட்டத்தில் பாய்கிறது; கப்பல் என்றபெபர் நினைப்பிற்கு வருகிறது. இவ்வாறுதான் நமது மனத்தில் பொருட்டொடர்கள் ஏற்படுகின்றன. செயற்கைத் தூண்டல் செயற்கைத் துலக்கம் முதலியன அனைத்தும் இவ்வகையால்தான் எழுகின்றன.

**உடற்பழக்கம்:**—நம்முடைய செயல்களை ஒன்றுபடுத்திப் புதியவழியில் பழக்கிக் கொள்கிறோம். ஒரு நாட்டத்தோடு இப்புதிய செயற்றொடர்கள் எழுகின்றன. முதலில் நமது முழுக்கருத்தையும் அதில் நாட்ட வேண்டியிருக்கிறது. பழகியபின் அது மடக்குச் செயல்போல் எளிதாகிறது. இவற்றைத் திறமைச் செயல்கள் (Skilled movements) எனலாம். திறம்பெறுதல் (acquisition of skill) என்று உலகினர் பேசிக்கொள்ள வில்லையா? திறம் பெறுகையில் புதிய இயக்க அமைப்பை உண்டாக்குகின்றோம். முன்னைய இயக்கங்களை ஒன்றுசேர்ப்பதோடு அவற்றை வேறுவேறாகப் பிரித்துப் புதியவழியில் வகைசெய்கின்றோம். யாழ் மீட்டுதலில் காணக்கிடக்கும் செயல்கள் யாவை. யாழைத் தொடைமீது தாங்குதல்; ஒரு கையால் அணைத்து நரம்பைத் தைவரல்; மற்றொரு கையைக் குடத்தின்மேல் ஊன்றி விரல்களால் தட்டி யாழைமீட்டல்; என்றஇவையேயல்லவோ. தாங்குதல் அணைத்தல் தைவரல், தட்டுதல் என்ற இவை முன்னரே அமைந்த இயக்கங்கள். இவற்றைப் புதியவகையில் ஒருங்குசேர்ப்பதே இங்குப் புதுமையாயது. அவ்வாறு சேர்த்துத் திறமைபெற்றால் அஃது பழக்கமாகின்றது. யாழை மீட்டும்போது விரல்களை மாற்றிமாற்றி மேற்றாக்கி நரம்பைத் தட்டுகின்றோம். ஆனால் அப்பழக்கம் ஏற்படுவதற்கு முன்போ நமது விரல்கள் ஒருங்கே இயங்கும் இயல்புடையன. சுண்டுவிரலைத் தூக்கினால் அடுத்தவிரலும் உடனியங்குகின்றது. இவ்வாறு ஒருங்கு இயங்காதவாறு அவற்றைத் தனித்தனியே வேறுபிரித்து இயக்கப் பழகினால் திறமை பெறுகின்றோம். எனவே நாம் விரலளவில் பழைய இயக்கங்களை வேறுவேறு பிரிக்கின்றோம். ஆகவே பழக்கச் செய்கையில், பழைய இயக்கங்களைப் புதியவகையில் ஒன்றுசேர்ப்பதும், ஒன்றாக எழுந்த இயக்கங்களை வேறு பிரிப்பதும் என்ற இரண்டும் காணக்கிடக்கின்றன. ஒன்றுதலும் பிரிதலும் என்ற இரண்டும் நமது நாட்டத்தின் பயனாய் வந்தன. யாழ் மீட்டி இசைபாடவேண்டும் என்ற நாட்டம் இல்லாதபோது இவை எழுதற்கு இடமேது? நோக்கத்தை விட்டுப் பழக்கத்தை உணர்வது அருமையினும் அருமை.

**எதிர்மறைப் பொருத்தம்:**—நமது நாட்டத்திற்கும் நிலைக்கும் ஏற்றவாறு பழக்கங்கள் எழுகின்றன. ஏதாவது தூண்டல் உண்டாயபோது அதற்கேற்றபடி துலங்குகின்றோம். உலகத்தோடு பொருத்தமுறுதலே நம் செயலின் நோக்கம். இப்பொருத்தம் ஏதாவது ஒரு செயலைச் செய்வதனால் ஏற்படுமானால் உடன்பாட்டுப்பொருத்தம் எனலார். ஒரு செயலும் செய்யாமல் வாளாகிடப்பதால் உண்டாகுமானால் எதிர்மறைப்பொருத்தம் எனலாம். ஒரு சிலந்தி தன் கூட்டைக் கட்டிக்கொண்டிருந்தது. அருகிருந்த ஒருவர் கழியால் தரையைத் தட்டினார். பேரொலி கேட்டதும் அவ் வச்சநிலையினின்றும் பிழைக்கக் கீழே குதித்தது. சிறிதுபோது தாழ்ந்ததும் ஒன்றும் நேரா

மையால் மறுபடியும் தன் கூட்டிற் போய்ச் சேர்ந்தது. மறுமுறையும் இவ்வாறே கட்டினர்; பழைமைபோலக் கீழ்வீழ்ந்து சிறிது பொழுதுசென்றதும் தன்கூட்டை யடைந்தது. இவ்வாறு பலமுறையும் நிகழ்ந்தபோது உடன்பாட்டு முறையால் கீழ்க்குதித்தல் போன்ற யாதானும் ஒரு செயலைச்செய்து பொருத்தமுறல் முறையன்றென அதற்குப் பட்டுவிட்டது. அவ்வொலி கேட்டபோது ஒன்றும் செய்யாது முன்னிலையிலேயே இருப்பதே தகுதி என்பதும் பட்டது. பின் கழிகொண்டு தரையிலடித்தபோது கூட்டிலேயே வாளா குந்திக்கிடந்தது. தான் முன் செய்திருந்த செயலைச் செய்துகொண்டுபோயிற்று.

இவ்வாறு ஒன்றும் செய்யாமையாகிய எதிர்மறை வழியாகவே அச்சிலந்தி ஆம் மாறியநிலையாகிய ஒலி நிலையோடு பொருத்தமுற்றது. ஈதே எதிர்மறைப் பொருத்தம் (Negative adjustment) ஈது உணர்வையும் நோக்கத்தையும் பொறுத்தது அன்றோ? குதிரை கடிவாளமிட்ட முதன்முறையில் மீறித் திமிர்கின்றது; அலைக்கழிப்புண்கிறது; பறவையை முதன் முதல் கூட்டிலடைத்தால் இறக்கையை அடித்துக் கொள்கிறது. விலங்குகளைக் கூட்டில் இருக்கவைத்தால் கயிற்றை இழுத்து இழுத்து வலிக்கின்றன. பழகியபின்னர் வாளாகிடக்கின்றன; எதிர்மறைப் பொருத்தமுறுகின்றன.

# தமிழ்ப் பாடம் 129.

[ 534-வது பக்கத் தொடர்ச்சி. ]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

மாயிரு ஞாலத்து வந்து மன்னர்கோ
னேயபே ரழகுகண் டிமைப்பி னாட்டமோ
ராயிரம் பெற்றபே றடைந்து ளேனெனச்
சேயுயர் விசும்பினுக் கிறைவன் செப்பினான். 8.

இதுமுதல் ஐந்து கவிகளில், நளனுடைய அழகைக்கண்டு வியந்த தேவர்கள் தம்முள் உரையாடிக் கொள்வது கூறப்படுகின்றது.

(உரை) "மா - மிகவும், இரு - பெரிய, ஞாலத்து - பூமியில், வந்து - வந்து, மன்னர் கோன் - அரசர்க்கு அரசனாகிய இவனது, ஏய - பொருந்திய, பேர் அழகு கண்டு - பெரிய அழகைக் கண்டதால் நான், இமைப்பு இல் - இமைக்காத, நாட்டம் ஓர் ஆயிரம் - ஆயிரம் கண்கள், பெற்றபேறு - பெற்றிருந்தாலும் ஒரு பாக்கியத்தை, அடைந்துளேன் - இன்றைக்கு எய்தினேன்", என - என்று, சேய்உயர் - தூரத்தில் உயர்ந்திருக்கின்ற, விசும்பினுக்கு - ஆகாயத்திற்கு, இறைவன் - தலைவனான இந்திரன், செப்பினான் - கூறினான்.

விரிவுரை:—பொன்னுலகத்தில் வாழ்கின்ற இந்திரன் மண்ணுலகத்திற்கு வந்தது தாழ்வாகும். அவன் செய்த தீச்செயலின் சாபத்தால் அடைந்த ஆயிரம் கண்கள் இருப்பதும் குற்றமே. "ஆயினும், இக்குற்றங்கள் இருப்பதாலன்றோ யான் இன்று நளனுடைய அழகை முழுவதும் பார்க்க இயன்றவனாயினேன்" என்னும் கருத்து இச்செய்யுளில் அடங்கியிருக்கின்றது. ஆதலால் இச்செய்யுள் இலேச அணியின்பாற்படும். ஒரு குற்றத்தால் குணம் விளைந்ததாகவேனும் அல்லது, ஒரு குணத்தினால் குற்றம் விளைந்ததாகவேனும் திறப்பட அமைத்துச் சொல்வது இலேச அணியாகும். ஆயிரங்கண்களுடைமை இந்திரனுக்கு ஓர் குற்றம்; அக்குற்றத்தால் நளனது அழகை முழுவதும் பார்க்கலாயது குணம். இவ்வாறின்றி ஈராயிரம் கண்களுடைய ஆதிசேடன் இதையே உரைத்திருப்பானாயின், அக்கண்களுடைமை அவனுக்கு யாதுங் குற்றமில்லை யாகையால், அது இலேசஅணி ஆகாது. விரகவேதனையுற்றிருந்த தமயந்திக்குத் தோழியர் முதலினோர் அன்புடன் செய்த சீதளோபசாரங்களினால் அவளது துன்பமே பின்னும் அதிகரிக்க அவள்,

சீதையொருத்திகாதலரைத்தணந்துளாரிற்சிறப்புடையள்
ஆதலுணர்ந்தேமருகிருந்தோரரக்கமாதராதலினற் [றால்
காதலுளார்போல்தோழியர்சூழ்ந்திவ்வாறியற்றிற்கழிதுய
ரதமுழந் துன்னுயிர்சோருமென்போலயர்வுற்றிருப்பாளே.

என்று புலம்பினாள் என இந் நைடதத்தில் சந்திரோபாலம்பனப் படலத்தில் வந்திருக்கும் செய்யுளும் இலேச அணியை உட்கொண்டது. "நாயகனைவிட்டுப் பிரிந்திருந்தவர்கள் எவரினும் சிறப்புடையவள் சீதை ஒருத்தியே என்பதனை இப்பொழுது உணர்ந்தேன்; ஏனெனில் அப்பொழுது அவளைச் சூழ்ந்திருந்தவர் இரக்கமற்ற அரக்கமாதர்களே யொழிய, பரிவுடன் துயர்நீக்க முயல்கின்ற தோழிமார்களல்லர். மற்று, எனக்கு உபசாரஞ்செய்யும் இத்தோழியர்போல் அவளுக்கும் இருந்திருப்பார்களாயின், பொறுக்கமாட்டாத் துயர்பட்டு உயிர்சோரும் என்னைப்போல் அவளும் அயர்ந்திருப்பாள்", என்பது இச்செய்யுளின் பொருள். இதனில் இரக்கமற்ற அரக்கியர்களால்சூழ்ந்திருப்பது ஒரு குற்றமாயிருக்க, அக்குற்றத்திலிருந்து, துன்பம் அதிகமாகாததாகிய குணம் சீதைக்கு வாய்த்ததென்றும், பரிவுடைய தோழியர்கள் இருப்பதாகிய குணத்தினால் தனக்குத் துன்பந்தான் அதிகரிக்கின்ற குற்றமே ஏற்பட்டதென்றும் தமயந்தி திறமையுடன் காட்டுகின்றாளாதலால் இது இலேசவணி ஆகின்றது.

குறிப்பு:—

மா + இரு = மாயிரு—நிலைமொழி ஆகார உயிர் ஈறாயிருக்க வருமொழிமுதல் உயிர் வகர உடன்படுமெய்பெற்றுப் புணரவேண்டியது விதி. (2-788) ஆயினும் இங்கு மா என்பது உரிச்சொல்லாதலால் அவ்விதிக்கு மாறாக யகரஉடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது (2-833).

பேறு + அடைந்துளேன் = பேறடைந்துளேன்—நிலைமொழி ஈற்றில் றகரமெய்யின்மேல் ஏறியநெடிற்றொடர்க் குற்றியலுகரம் இருப்பினும், இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் அந்த றகரமெய் இரட்டவில்லை. (2-988)

---



மண்டமர் கடந்தவேன் மன்னர் மன்னனைக்
கண்டமற் றொருவர்தோள் காமுற் றீர்ந்தொடை
தொண்டைவாய் மடமயில் சூட்டு மோவெனத்
தெண்டிரைக் கனைகடற் செல்வன் கூறினான் 9.

(உரை) "மண்டு - நெருங்குகின்ற, அமர் - போரை, கடந்த - வென்ற, வேல் - வேலையுடைய, மன்னர் மன்னனை - அரசர்க்கு அரசனாகிய இவனை, கண்டும் பார்த்தபிறகும், மற்றொருவர் - வேறு ஒருவருடைய, தோள் - தோள்களை, காமுற்று - ஆசைப்பட்டு, தொண்டைவாய் - கொவ்வைக்கனிபோன்ற வாயை உடைய, மடமயில் - இளமைபொருந்திய மயிலின் சாயலை உடைய தமயந்தியானவள், ஈர்ந்தொடை - குளிர்ச்சிபொருந்திய சுயம்வரமாலையை, சூட்டுமோ - சூட்டத்தான் சூட்டுவாளோ." என - என்று, தெள் திரை - தெளிந்த அலைகளை உடைய, கனைகடல் - ஒலிக்கின்ற கடலுக்கு, செல்வன் - தலைவனாகிய வருணன், கூறினான் - சொன்னான்.

கருத்து:—தமக்குமுன் எதிர்ப்பட்ட வப் பேரழகுடைய வேந்தனும் தமயந்தியின் சுயம்வரத்திற்கே ஏகுதல் வேண்டுமென்று ஊகித்த வருணன் இவனிருக்க அத்தெரிவை தம்மெவரையும் கண்ணெடுத்துப் பாராளென் றிசைக்கின்றான்.

குறிப்பு:—

அமர் + கடந்த = அமர்கடந்த—இது அமரைக்கடந்த என்று விரியுமாகையால், இரண்டாம் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கிருக்கின்றது. ஆதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. (3—247)

ஒருவர் + தோள் = ஒருவர்தோள் — ஒருவருடைய தோளென விரியுமாகையால் இது ஆறும்வேற்றுமைத்தொகை. அத்தொகையில் வருமொழி முதல் வல்லினமெய் மிகவேண்டு மென்பது பொதுவிதியாயினும் நிலைமொழி இங்குஉயர்திணையாகையால் மிகவில்லை. (3—370)

திரை + கனை = திரைக்கனை—திரைகளை உடையகனை, என்று விரியுமாகையால் இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை. ஆகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. (3—267)

கனை + கடல் = கனைகடல்—இது கனைக்கின்ற கடல் என்று விரியுமாகையால் நிலைமொழி காலம் கரந்த பெயரெச்சமாக விருக்கின்றது. ஆதலின் வினைத்தொகை. வினைத்தொகையில் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது. (3—490)

---

பாந்தண்மேற் கிடந்தபார் பரிக்குந் திண்டிறல்
வேந்தனுக் கேதொடை வேய்ந்தி லாளெனி
லேந்திழை யெழினல மென்கொ லாமெனக்
காந்துவெங் கதழெரிக் கடவுள் சாற்றினான் 10.

(உரை) "பாந்தள்மேல், ஆதிசேடனாகிய பாம்பின் மேல், கிடந்த - இருக்கின்ற, பார் - பூமியை, பரிக்கும் - தாங்குகின்ற, திண்திறல் - திண்ணிய பராக்கிரமம் பொருந்திய, வேந்தனுக்கே - இந்த அரசனுக்கே, தொடை - மணமாலையை, வேய்ந்திலாள் எனில் - சூட்டாமற் போவாளானால், ஏந்து இழை - விளங்குகின்ற ஆபரணங்களை அணிந்த அத் தமயந்தியின், எழில் நலம் - அழகின் பிரயோசனம், என் கொல் ஆம் - என்ன ஆகும் (வீணே யன்றோ)" என - என்று, காந்து - காந்துகின்ற, வெம் - வெப்பத்தை உடைய, கதழ் - வேகத்தையுமுடைய, எரிக்கடவுள் - அக்கினி தேவன், சாற்றினான் - கூறினான்.

விரிவுரை:—இவ்வக்கினிதேவன் சான்றவனாதலால் தன்னலம்நோக்காப் பெருந்தன்மையை நன்கு காட்டுகின்றான். பேரழகு உடைய அம்மன்னனைக் கண்டபின் தமயந்தி தமக்கு மாலையிட இசையாள்என முன் வருணன் உரைக்க, அக்கினிக்கடவுள் அவ்வாறு அவள் இசைந்தாளாயினும், அதனால் அவளழகெலாம் பாழாகுமேயென இரங்குகின்றான்.

குறிப்பு:—

கிடந்த + பார் = கிடந்தபார்— பெயரெச்சத்தொடர், ஆதலின் வலி மிகவில்லை.

வேந்தனுக்கு ஏ + தொடை = ஏகார இடைச்சொற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது—இந்த ஏகாரம் பிரிநிலைப்பொருளது.

ஏந்து + இழை = ஏந்திழை—இது ஏந்திய இழை என விரியும் (ஏந்திய = நிமிர்ந்த), ஆகையால் வினைத்தொகை. ஆயினும் ஏந்திய இழை என்பதோடு நில்லாமல், ஏந்திய இழைகளை அணிந்தவள் என்றும் விரியவேண்டியது தமயந்தியைக் குறிப்பதற்குரிய பொருளிற்கு இன்றியமையாததாகையால் இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

ஏந்து + இழை = ஏந்திழை என்றானது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம்கெட அது நின்றிருந்த மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (2—909).

எரி + கடவுள் = எரிக்கடவுள்—இது எரியாகிய கடவுள் என விரியும் (எரி-நெருப்பு). எரி என்பது இங்குப் பெயர்ச்சொல். நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் ஆகிய என்னும் பண்புருபு தொக்கிருப்பதால் இது பண்புத்தொகை. அதனினும் வருமொழி பல தேவர்களைப் பொதுவாகக் குறிக்கும் கடவுள் என்னும் சொல்லயிருக்க, நிலைமொழி அப்பொதுமை நீக்கி எரி என்று சிறப்பித்துக் காட்டுவதால் இது சாரைப் பாம்பு என்பதுபோல் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும். (2—411). இதை வினைத்தொகையோ என்று மயங்கலாகாது. வினைத்தொகையாயின் வல்லினம் மிகாமல் எரிகடவுள் என்று நிற்றல் வேண்டும். அப்பொழுது எரி என்பது வினைச்சொல்லாகி அத்தொடர் எரிகின்ற கடவுள் என விரிதல் வேண்டும்.

## இலக்கணம்

யகரமெய்தவிர மற்றெல்லா மெய்யீறுகளும், வருமொழிமுதல் யகரமெய்யோடு புணருங்கால் இகரம் தோன்றினுந் தோன்றலாமென்பதை முன்வாரப் பாடத்தில்கூறினோம். இனிச்சிற்சில மெய்யீறுகளைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு வருமொழிமுதலில் வரக்கூடிய வெவ்வேறு மெய்கள் புணர்தற்குரிய விதிகளைப் பார்த்தல் வேண்டும்.

### B. யகர, ரகர, ழகர மெய்யீறுகள்.

1. இவ்வீறுகளும் + வருமொழிமுதலில் வல்லின மெய்யும்:—இவ்வீறுகள், உயிர்ற்றுச் சொற்களைப் போலவே வருமொழிமுதல் வல்லினமெய்யோடு

புணரும் என்பதை முன்னர்ப் பலவிடங்களில் கூறியிருக்கின்றோம். அதன்படி, முன் கூறப்பட்டிருக்கின்ற விதிகள்யாவும் உயிரீற்றிற்கும் யகர ரகர ழகர மெய்யீறுகளுக்கும் ஒக்குமென்பதோடு ஆங்காங்கு உதாரணங்களும் காட்டி முடித்திருக்கின்றோமாதலால் மீண்டுமவைகளை இங்குக் கூறவேண்டியதில்லை.

நகை + பெட்டி = நகைப்பெட்டி — உயிரீற்றின் முன், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில், வல்லின மெய் மிகுந்தது.

அவ்வாறே,

கூழ் + சட்டி = கூழ்ச்சட்டி
தேர் + கயிறு = தேர்க்கயிறு
பாய் + கடை = பாய்க்கடை

என, யகர ரகர ழகர மெய்களின் முன்னும் இரண்டாம்வேற்றுமை உருபும் பயனு முடன்தொக்கதொகையில் வருமொழிமுதல்வல்லினமெய்கள்மிகுந்தன.

இவ்விதமே மற்றவிதிகளையும் அவ்வவைகளுக்கு ஏற்ற உதாரணங்களையும் முன்பாடங்களினின்று எடுத்து ஒப்புநோக்கித் தெளிந்துகொள்க.

எனினும், உயிரீற்றுப்புணர்ச்சியோடு ஒவ்வாமல் இம்மெய்யீறுகள் வல்லினமெய்யோடு புணர்தற்குரிய விதிகளும் சில உள. அவைகளை இங்குக் கூறுவோம்.

(a) முன்னுரைத்த விதிகளின்படி வருமொழி வல்லினமெய் மிகவேண்டிய இடங்களில், யகர ரகர ழகர மெய்யீறுகளுக்குமுன் வருகின்ற வல்லின மெய்களுக்கு இனமான மெல்லினமெய்கள் மிகுகின்ற வழக்குக்களும் தமிழில் சில இருக்கின்றன:-

வேய் + குழல்—இது வேயினால் (வேய் = மூங்கில்) செய்த குழல் என்று விரியுமாகையால் மூன்றும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை; ஆதலின் வருமொழிமுதல் வல்லின மெய் மிகுந்து வேய்க்குழல் என்று புணரவேண்டும் (ஃ—306). அப்படிப் புணரலாம்; ஆனால் அதுவுமன்றிக் ககரமெய் மிகுவதற்குப் பதிலாய், அந்த வல்லினமெய்க்கு மெல்லின எழுத்தாகிய ஙகரமெய் மிகுந்தும் புணரலாம். எனின், வேய்ங்குழல் என்றாகும்.

ஆர் + கோடு = ஆர்க்கோடு. ஆர்ங்கோடு ஆர் என்பதற்கு, ஆத்திமரம் என்பது பொருள்; கோடு என்றால் கிளை. இது ஆறும்வேற்றுமைத் தொகை. வருமொழிமுதல் ககரமெய்யேனும், அல்லது அதற்கினமான ஙகரமெய்யேனும் மிகலாம்.

வீழ் + குறை = வீழ்க்குறை அல்லது, வீழ்ங்குறை. (வீழ் = ஆலம்விழுது) ஆறும்வேற்றுமைத் தொகை. வருமொழிமுதல் ககரமெய்யேனும் அல்லது அதற்கினமான ஙகர மெய்யேனும் (மெல்லினம்) மிகலாம்.

அவ்வாறே,

பாழ் + கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு.
பாழ் + பிணம் = பாழ்ப்பிணம், பாழ்ம்பிணம்.

இதனில், பகரத்திற்கினமாகிய மகரமெய் மிகுந்தது.

பாழ் + சேரி = பாழ்ச்சேரி, பாழ்ஞ்சேரி.
கூர் + கோடு = கூர்க்கோடு, கூர்ங்கோடு.

என வருதல் கூடும்.

குறிப்பு:—இவ்விதம், வல்லினமேனும் அதற்கினமான மெல்லினமெய்யேனும் மிகுந்து வர இயலுமாயின் அதனை உறழ்தல் என்பர். இவ்வாறு உறழ்வது பெரும்பாலும் வேற்றுமைத் தொகைகளிலும் பண்புத்தொகையிலுமே நோக் காண்கின்றோம். உறழ்ந்து வரலாம் என்றதனால் நமது இஷ்டப்படி புணர்த்திக்கொள்ளலாம் என்றெண்ணின் பிழையாம். பார்ப்பொறை என்பது ஆறும்வேற்றுமைத் தொகையாயினும் பார்ம்பொறை என உறழ்ந்துவரக் கண்டதில்லை. இவ்வாறே உறழாதன எண்ணிறந்தன. ஆதலின் ஆன்றோர்வழங்கியுள்ள சொற்றொடர்களையே உறழக்கொள்வது நலம்.

(b) வினையெச்சத்தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுமென்று முன்னர்க் கூறியுள்ளோம். (3-434) ழகரமெய்யை ஈற்றிலுடைய வினையெச்சங்களில்லை. போய்ச்சொன்னான், என்பதுபோல் யகர மெய்யை யீற்றிலுடைய வினையெச்சங்களின்பின் மிகும். செய்யியர் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் ரகர மெய்யை ஈற்றில்பெற்று வரக்கூடும். இவைகளுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

காணியர் + சென்றேன் = காணியர் சென்றேன்
உண்ணியர் + தந்தேன் = உண்ணியர் தந்தேன்.

குறிப்பு:—காணியர், உண்ணியர் என்பதற்குக் காணும்பொருட்டு, உண்ணும்பொருட்டு என்பது பொருள்.

(c) உயிரீற்றுப்புணர்ச்சிவிதியினின்று வேறுபட்டு நடக்கும் சொற்கள் சிலவுள.

(1) தாய் என்ற சொல்லின்பின் வரும் வல்லின மெய் ஆறும் வேற்றுமைத் தொகையிலும் மிகாமல் இயல்பாய்ப் புணரும்.

தாய் + கை = தாய்கை
தாய் + தலை = தாய்தலை.

(2) தாழ்என்ற சொல்லிற்குப்பின் கோல் என்னுஞ் சொல் வருமாயின், அவை 'தாழ்க்கோல்' (தாழைத் திறக்குங்கோல்) என்று வல்லினம் மிகுந்து புணர்வதோடு, தாழக்கோல் (தாழ் + அ + க் + கோல்) என்று அகரச்சாரியையும் பெற்றுப் புணரலாம்.

(3) கீழ் என்ற சொல்லிற்குப்பின் வல்லினம் மிக வேண்டிய தொடர்களில் மிகுந்தும் மிகாமலும் புணரலாம்.

கீழ் + குலம் = கீழ்க்குலம், கீழ்குலம்
கீழ் + பாடி = கீழ்ப்பாடி, கீழ்பாடி
கீழ் + துறை = கீழ்த்துறை, கீழ்துறை

குறிப்பு:—தாய், தாழ், கீழ், என்ற இம்மூன்று சொற்களுக்கே இங்குக் குறித்த இவ்விதிகள் உரியவை. ஏனைய சொற்களெல்லாம் பொதுவிதிகளின்படி புணரும்.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[530வது-பக்கத்தொடர்ச்சி]

### 1-ம் பத்து 8-ம் தசகம்.

ஓடும் புள்ளேறி
சூடுந் தண்டுழாய்
நீடு நின்றவை
ஆடு மம்மானே. 1

குறிப்பு:—அம்மான் புள்ளேறி ஓடும், தண் துழாய் சூடும்; நீடு நின்றவை ஆடும்'' என்பது அந்வயம். அம்மான் - ஸ்வாமி, அதாவது திருமால். புள் - கருடப்புள். நீடு - எல்லாக்காலமும். நின்றவை - அழியாமல் நிற்கும் ஆத்மாக்களும் பொருள்களும். ஆடும் - முழுகும், அதாவது ஒருநீராகக் கலக்கும்.

பொழிப்புரை:— எம்பெருமான் கருடவாஹனரூடராய், தனக்கு வேண்டும்போதும், பக்தர்கள் அபேக்ஷிக்கும்போதும், கருடன் வேண்டும்போதும் சஞ்சரிப்பர். சீதளமான திருத்துழாயைத் தன் சிரஸில் தரித்துக்கொள்ளும் தீர்க்ககால வாஸிகளான வைகுண்டத்திலுள்ள நித்தியஸூரிகளிடத்தில் ஒருநீராகக் கலந்து பரிமாறும். அவ் வைகுண்டத்திலுள்ள பொருள்களைத் தன் இச்சைப்படி போக்கியவஸ்துக்களாக அநுபவிக்கும். விசேஷக் குறிப்பு:-இந்தப் பாட்டு வாஞட்டில் பகவானுடைய நித்திய ஐசுவரியத்தைப்பற்றிக் கூறுகிறது. சென்ற தசகத்தில் ஆழ்வார், பகவானை வழிபடுவது சுகரூபமா யிருக்குமென்றருளிச்செய்தார். வழிபடுமவன் சீர்மையும் பெருமையும் பெருந்தகையு முள்ளவனாயிருந்தாலல்லவோ அடியார்செய் பஜநத்தை ஏற்குமென்ன அவனது ஐச்வரியவத்தை எடுத்து உரைப்பதை இந்தத் தசகம் நோக்கமாக உடையதென்பது ஏற்படுகிறது. இதுவும் நிற்க. இக்கலவி பக்தனுக்குச் சுகரூபமாயிருக்கலாம். எம்பெருமானுக்குஅவ்வண்ணம் இருக்குமோஎன்ன, அவன் ஆர்ஜவகுண முள்ளவன், அதாவது பக்தர்களுடன் அவரவர் புத்திவ்யவசாயத்துக்கும் நோக்குகளுக்கும்தக்கபடி ஒருநீராகக் கலக்கும் சுபாவமுள்ளவன் என்று இத்தசகம் கற்பிக்கின்றது. அது எங்ஙனம் எனில், இப்பாசுரத்தில், நித்தியஸூரிகளுடன் செய்யும் கலவி உண்மையாகத் தனக்கும் இன்பமாக இருக்கும்படியாகவும் கலப்பான் என்று சொல்லப்பட்டிருக்கிறது — இந்த ஆர்ஜவகுணமே இந்தப் பத்துக்கு இலக்கு. ஆழ்வாரின் தசகங்கள் ஒன்றன்பின் ஒன்று சங்கிலித்தொடராய் இலக்கண முறையில் தர்க்கரீதிக்கு வழுவில்லாமல் இனிது நடக்கலாகும். இத்தசகத்திற்கும் சென்ற தசகத்திற்கும் இம்முறையை அறிய முயன்றும் பூர்வ உரைகாரர்கள் இவ்வளவே சமர்த்தனம் செய்திருக்கிறார்கள். யோகீச்வரரான ஆழ்வார் இத்தசகத்தின் முதல் திருவாய்மொழியில் வேதாந்த தத்துவங்களை நறுந்தமிழ்கொண்டு உபதேசித்தாராயினும் மதுரகவி போன்ற சீடர்களும் ரஸிகர்களும் புலவர்களும், ஆழ்வார் அருளிச்செய்யும் பாக்கள் நிரம்பப் பொருளடக்கியிருப்பதால் எளிதில் உணரமுடியவில்லை என்று முறையிட, "வீடுமின் முற்றவும்" என்கிற இரண்டாம் திருவாய்மொழியில் சிறுபதங்கள் கொண்டு உபதேசம்ஆரம்பித்துவந்தும் தாம்உரைக்க வேண்டியபொருள்பாடுகளை இச்சிறுபாக்கள் உணர்த்த இயலாமைபற்றித் திரும்பவும் பழையபடிமுறை போலே பாடத்தொடங்கி "வளவேழுலகின்" வரை வந்தவருக்கு, திரும்பவும் சீடர்கள் தங்கள் உணர்வுக்கும் அறிவுக்கும் அவை மீறிநடப்பதை விண்ணப்பம் செய்யஅவர்களத வேண்டுகோளுக்கிணங்கிப் "பிறவித்துயரற" "பரிவதில் ஈசனை" என்னுந் தசகங்களைப் பாடினார். மேல் தசகங்களும்கடினமென்று கூறி இவைகளிலும்சுலபமாய்ப்பாட எத்தனித்து மஹானான ஆழ்வார் "ஓடும்புள்ளேறி" என்கிற இத்தசகம் ஆரம்பிக்கையில், தாம் செல்ல நியமித்துக்கொண்ட பாதையை விட்டு இவர்களின் நிர்ப்பந்தத்திற்கிணங்கிக் கொஞ்சம் இவ்வாறு விலகியதால் அவர் கருதிய பொருட்டொடர்ச்சி சிறிது பிறழ்ந்ததோ என்றவொரு சங்கை வெகுகாலமாய் என் சிற்றறிவில் உறுத்திக் கொண்டிருக்கிறது. ஆயினும் ஸ்ரீமங்கமாதந்த தேசிகனும் பின்னுள்ள கலையாசாரியார்களும் இத்தசகம் பகவானுடைய ஆர்ஜவம் (செம்மையை) உரைப்பதாக அபிப்பிராயப்படுதல்பற்றி அதையேநாம் நிர்வஹிக்கக்கடமைபூண்டு உரையிடுகிறோம். அடுத்த தசகத்தின் கவடுகளையும் பதரசனைகளையும் பொருள் பாடுகளையும் உணரப்பெற்றவர் நாம் இங்குக் கூறியிருப்பது ஒருவாறு ஒக்குமென்று நினைப்பார்.

---

அம்மானாய்ப் பின்னும்
எம்மாண்பு மானான்
வெம்மா வாய்கீண்ட
செம்மா கண்ணனே. 2

18912

பதவுரை

வெம் மா - குரூரமாகிய கேசி என்கிற குதிரை ரூபமான அசுரனை, வாய்கீண்ட - கிர்ஷ்ணாவதாரத்தில் வாயைப்பிளந்த - செம்மா-செந்தாமரைப் பழம் போல்உள்ள. கண்ணன்-கண்களையுடையவன், அம்மானாய் - மேற்செப்பிய நித்திய ஐச்வரியத்துக்கு எஜமானாய், எம்மாண்புமானான் - எவ்வகைப்பட்ட பெருமை (இங்கு) ஸௌந்தரியமும் உள்ளவனான்.

குறிப்பு:—இங்கு அழகான கண்ணன் என்று சொல்லிநிற்காமல், வேறே ஸௌந்தரியங்களையும் கூறுவது அவதார விசேஷங்களில் பகவானுடைய ஸௌந்தரியத்தில் ஆழ்வாரின் ஈடுபாடுபற்றி வந்தது.

---

கண்ணாவா னென்றும்
மண்ணோர் விண்ணோர்க்குத்
தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே. 3

"மண்ணோர் விண்ணோர்க்குக் கண்ணாவான் என்றும் தண்ணார் வேங்கட விண்ணோர்வெற்பனே" என்பது அந்வயம்

உரை:— இவ்வுலகத்தார்க்கும் விண்ணோர்க்கும் ஒக்ககணக்கு இனிய எம்பெருமான் விண்ணோர் வந்து அடையும் திருப்பதியாகிய வேங்கடமலைக்கு உடையவன்.

குறிப்பு—கண்ணுவான்-நோக்குகிறவர்களின் திருஷ்டியையும் சித்தத்தையும் அபஹரிக்கிறவன். முன் இரண்டு பாசுரத்தால் நித்திய சூரிகளுக்கு இன்பன் என்றார். இதில் நம்போன்ற மண்ணுலகர்க்கும் இனிய அரும் பொருள் என்கிறார். சிறந்த நித்தியஸூரிகள் தினந்தோறும் திருப்பதிக்குவந்து பூஜிக்கையால் அவர்களுடைய "வெற்பு" மலை என்று அருளிச்செய்கிறார். மற்றொரு பாசுரத்தில் தேவர்கள் அர்ச்சித்த பூக்கள் அம்மலையில் சிதறிக்கிடக்கின்றன என்றும் அருளுகிறார். இங்கு வேங்கடத்தை எடுத்தது, தேவர்கள் கையிலும் உலகமக்களிடத்திலும் பூஜையைச் சமமாக எம்பெருமான் வாங்கி ஏற்கிறானென்று அவனது ஆர்ஜவகுணத்தின் பெருமையைக் காட்டுவதின் நிமித்தமாகும். இவ் வார்ஜவகுணந்தான் எப்படி இருக்கும் என்னில், முகம்கொடுத்தல் சிரகம்பனம் வரவேற்றல் குசலபிரசனம் முகமலர்ச்சி உசாவுதல் அளவளாவுதல், ஒத்தசினேகிதர்கள்போல் ஒரு நீராக உள்கலத்தல் முதலியனவாம்.

வெற்பை யொன்றெடுத்து
ஒற்க மின்றியே
நிற்கும் அம்மான்சீர்
கற்பன் வைகலே. 4.

உரை:—கோகுலசம்ரக்ஷணமார்த்தமாக கோவர்த்தனம் என்னு மலையைக் கையிலேந்தித் தாம் தனிமாத்தெய்வமாயிருந்தும் பசுநிரைகளை மேகவருஷத்தினின்றும் காப்பதில் நாணும் சங்கோஜமுமில்லாமல் குடைபிடிப்பவன்போல் நிற்கும். பசுக்களுக்கும் கோபாலர்களுக்கும் எல்லா மேலான தேவதைகளுக்கும் ஒக்க ஸர்வஸ்வாமியின் குணங்களை யான் நிரந்தரம் சொல்லி நிற்பேன்:—

குறிப்பு:—இந்திரனுக்குக் கோபாலர்கள் உண்டி உணவுகளைச் சமர்ப்பித்து நடத்தும் திருவிழாவில் சமைத்த பண்டங்களைத் தாமே கிருஷ்ணபகவான் அமுதுசெய்யவே அவன் வெகுண்டு சப்தகால மேகங்களைக் கொண்டு இடியும் புடையுமாக மழையை வர்ஷிக்கக் கோபாலர்களையும் பசுக்களையும் கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகக்கொண்டு கிருஷ்ண பகவான் காத்த கதை ஸ்ரீபாகவதத்தில் உள்ளது.

வைகலும் வெண்ணெய்
கைகலந் துண்டான்
பொய்கல வாதுஎன்
மெய்கலந் தானே. 5.

உரை:- கைகலந்து வெண்ணெயை உண்ணவேண்டுமென்ற ஆஸக்தியால் இடக்கையும் வலக்கையும் மாறிமாறிப் பாண்டத்தினுள்ளிட்டு எப்பொழுதும் வெண்ணெயை உண்ட ஸ்ரீகிருஷ்ணபகவான், எப்படி நிஜமாக வெண்ணெயை விழுங்குவதில் ஆசைப்பட்டானோ அவ்வண்ணமே என்னுடன் கலப்பதிலும் நிஜமாக ஆசைவைத்து, என்னுடைய தேஹத்திலும் ஆசைவைத்துத் தொட்டுக் கலந்தான். இதன் விதங்களை அடுத்ததசகத்தில் பாக்கப் பேசுகிறார்.

குறிப்பு:—குடத்திலிருக்கும் வெண்ணெய் முழுவதும் தாமே அமுதுசெய்யவேண்டுமென்ற ஆஸக்தி ஒருபக்கமிருக்கத் தான் திருடித்தின்பதை யசோதை பிராட்டியாரும் கோபிகளும் கண்டால் என்செய்வது என்று சங்கைகொண்டு அவசர அவசரமாய் இடக்கையும் வலக்கையுமிட்டுப்பாண்டத்தினின்றும் வாரிஎடுத்து முன்வாயிலிட்டு அதைருசிபார்தது மெல்லமெல்ல உண்ணவாய்க்காமல் திரண்டுருட்டி ஸ்ரீ கிருஷ்ணன் விழுங்கினார். யசோதைபிரட்டி பாண்டத்திலிருந்த வெண்ணெய் காணமற்போகவே "இங்கு யாரும் வந்ததில்லையே, கிருஷ்ணா? நீ எல்லா வெண்ணெயையும் புசித்தாயா" என்று கேட்கத் திருக்கைகளை முன்பேயே நிர்லேபமாக்கி வைத்திருக்கும் கிருஷ்ணன் "என் கையைப் பார், வாயைப்பார்" என்று பொய்சொல்லித் தான் புசிக்கவில்லை எனச் சாதித்தவன் என்னிடத்தில் கலக்கும்போது கைகளையும் திருவுடம்பையும் விமர்சமாகத் துடைத்துக் கொள்ள அவசியமில்லாததால் சிநேகத்துடனே என் மெய்தொட்டுக் கலந்தான். யசோதையினிடத்தில் பயத்தால் பொய்சொல்லி ஒதுங்கி வளர்ந்தவன் என்னிடம் உண்மையுடன் தம் சினேகதிரவிமுள்ள திருவுடம்போடு கலந்தான் என்கிறார். தம்மொடு கலந்த கலவியில் பொய் கலக்கவில்லை என்றார். பொய்கலத்தலாவது, மனதில் பிரீதி குறைந்திருக்க நாம் கலக்காவிடில் நமக்குச்சிநேகமில்லைஎன்று பக்தர்கள் நினைப்பார்களே என்று கலத்தல். இவ்வாறன்றியும் தாம் கலக்காவிடில் தாமே தரித்துநிற்க வொண்ணாமையால் பூரண மனோரதத்தோடு கலந்த கலவியைச் சொன்னபடி.

குறிப்பு:—இப்பாசுரம் சிறியதிருமடல். யசோதைப் பிராட்டியாரும் வேலைக்காரிகளும் "போந்தனையும் பொய் உறக்கம் உறங்கி" அவர்கள் போனவளவில் "தாளார்ந்ததோள்கள் உள்ளளவும் கைநீட்டி ஆராத வெண்ணெய் விழுங்கி அருகிருந்த மோர்ஆர் குடம் உருட்டி முன்கிடந்த ஸ்தானத்தே ஓராதவன்போல் கிடந்து", அவ்வேலைக்காரி தான்வைத்த வெண்ணெய் காணது "வயிறிடித்து இங்கார்புகுவார் ஐயா! இவரல்லால், நீராமிது செய்தீரென்று கயிற்றால் கட்டி ஊராரெல்லாரும் காண உரலோடு தீராவெகுளியாய்ச் சிக்கென" வார்த்தடிப்ப ஆராவயிற்றினன் திவ்விய சேஷ்டிதங்களைச் சிறியதிருமடல் (30-37) பாசுரங்களில் ரசமாகத் திருமங்கைமன்னன் பாடியது இங்கு ஞாபகத்துக்கு வருகிறது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்ட்கள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்




குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்

டிப்போ பா.,
பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.

ஜெனரல் ஏஜெண்ட்:- யுனைடெட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.




# தேவாரமும் வானநூலும்

[525-வது பக்கத் தொடர்ச்சி]

## II துருவநிலையும் தமிழிலக்கிய முறையும்

### (i) துருவநிலையும் அதன் காலவரையறையும்

சூரியன் மகம்மேருவைச் சுற்றி வட்டமிடுவான் என்று நமது புராணங்கள் கூறும். பூமியானது சூரியனைச் சுற்றிபோடும் பாதையையே அவ்வாறு கற்பிதமாய்க் கூறினர்போலும். இப்பாதையானது ககோள நிலையில் ஒரு வருஷத்திற்கு மற்றொரு வருஷம் பேதமின்றிக் காணப்படினும், உண்மையில் சற்றுப் பேதமுளதென்றே கணிதநூதால் நிரூபிக்கலாம். இரவில் வானத்தில் நட்சத்திரங்கள் உதயமாகி அஸ்தமிக்கும் பாதையின் யொழுங்கு, இவ்வருடம் இம்மாதம் இத்தேதியிற் காணப்படுவதே, மேல்வருடம் அம்மாதம் அத்தேதியில் சற்றும் பேதியாது விளங்கும். ஆயினும் ககோள கணிதத்தால் இவ்வொழுங்கு திசைநிலையில் சற்றுப் பேதப்படுவது துணரலாம். அக் கணக்கின்படி 55 வருடங்களுக்கு முக்கால் டிகிரி பேதிக்கும். இதனால் துருவஸ்தானமானது 1000 வருடத்திற்கு ஒருமுறை மாறுதல் அடையும். தற்காலத்தில் உத்திரட்டாதி நட்சத்திரக் கூட்டத்தி லுள்ள ஒரு நட்சத்திரம் துருவஸ்தானமடைந்திருப்பதுபோல் இருபத்தேழு நட்சத்திரங்களும் சுமார் 27,000 வருடங்களில் முறையே துருவநிலையடையும். திருஞானசம்பந்தர்காலத்தில் எந்த நட்சத்திரம் துருவனாயிருந்ததென்று ஆராய்ந்தோர், அவர்தேவார அகச்சான்றால் பரணி துருவனாயிருந்ததாகவும், நாம் உத்திரட்டாதியை முதலாகவெடுத்துக் கணிப்பதுபோல், சம்பந்தர்காலத்தில் பரணியை முதலாகவெடுத்துப் பிறகு நட்சத்திரங்களை முறையே மொழிந்ததாயும் காட்டுகின்றனர்.

கோளறு திருப்பதிகத்தின் 2-ம்பாசுரம் நோக்குக:-

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
வெருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழுபதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல யவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

என்னும்செய்யுளில் பரணியை முதலாகவெடுத்து அதினின்று ஒன்று கிருத்திகை, ஒன்பது பூரம், ஏழு ஆயிலியம், பதினெட்டு பூராடம், ஆறும் உடனாய நாள்கள் திருவாதிரை, பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி சுவாதி, விசாகம், சித்திரை என்னும் இந்நட்சத்திரங்களிற் பிரயாணம் செய்தவர் மீளாரென்றும், நோயிற் படுத்தவர் மீண்டும் எழார் என்பதும் கோளிலக்கண விதிபாய்க் காட்டப்பட்டன. ஆயினுஞ் சிவனடியார்க்கு இவை மிகவும் நல்லவையே என்பர் காழியர்கோன் பரணியை முதலாக வெடுத்துக்கூட்டுவது எக்காரணமெனின், எல்லா நட்சத்திரங்களும் துருவன் ஆட்சிக்குட்பட்ட தென்றும், அதனை வட்டமிடுமென்றும் நம்முன்னோர் எண்ணியதால், இவ்வழக்கம் தொன்றுதொட்டு வருகின்றது.

கடைச்சங்கத்தார்காலத்தில் கிருத்திகை நட்சத்திரம் துருவஸ்தானத்தி லிருந்ததாக அறிகின்றோம். இவை உண்மையாயின் நமக்கும் சம்பந்தர் காலத்திற்கும் இடையே மூன்று துருவனும், கடைச்சங்கத்திற்கும் நமக்கும் இடையே நான்கு துருவனும் மாறியனவென்றே கொள்ளல்வேண்டும். இக்கணக்கின் வண்ணம் அப்பர் சம்மந்தர் காலநிர்ணயம் செய்வதன்முன் இதுகாறும் தமிழ்வல்லோர் செய்த ஆராய்ச்சிகளின் முடிவுகளைச் சற்றநோக்குவோம்.

### (ii) சங்கமும், சமயகுரவர்கள் கால நிர்ணய ஆதரவுகளும்; அவற்றினின்று எழும் சங்கைகளும்.

சம்பந்தர்காலம் கி.பி.ஏழும் நூற்றாண்டென்று இதுகாறும் கிறிஸ்தவ பாதிரிமார்களுடன் போராடிய நமது தமிழறிஞர்கள் முடிவுகட்டிவிட்டார்கள். அன்னோர் கட்டிவிட்ட முடிவுகளை அவிழ்த்து ஆராய அடியேனுக்குச்சிறிதும் ஆற்றலில்லாவிடினும், அவற்றைச் சற்று நோக்கி அதில் எழும் சங்கைகளை நமது நாட்டுத் தமிழ்ப்புலவோர்முன் வெளியிடில், மேற்கண்ட முடிவினைப் புனர்விசாரணைக்கு உட்படுத்தலாமோ வென்பது அவர் தீர்மானிப்பரெனக் கூறலானேன். சம்பந்தர் காலநிர்ணய ஆதரவுகளாவன பின்வருமாறு:-

1. சிறுத்தொண்டர் வாதாபிநகரத்தை வென்ற சேனைத்தலைவரெனப் பெரியபுராணம் கூறுதலாலும், * சிறுத்தொண்டர் சம்பந்தருக்கு விருந்தளித்ததாய்ச் சேக்கிழார் மொழிவதாலும், திருச்செங்காட்டங்குடியின் இரண்டு பதிகங்களிலும் சிறுத்தொண்டருடைய புகழைச் சம்பந்தர் பெருமான் பாடியதாலும், வாதாபிநகரத்தைத் தமிழர்சேனை வென்றது சிலாசாசனத்தில் அந்நகரத்திற் காணப்படுகின்றபடியாலும், அது ஏழாம்நூற்றாண்டு இறுதியாதலானும், சம்பந்தர் ஏழாம்நூற்றாண்டினரென்று நிரூபிப்பர்.

இச்சான்று மிகவும் வலியதாய்க் காணப்படினும் சற்றுநிதானித்து நோக்குவோமாயின் அத்துணைவலியதாய் அமைந்திருக்கவில்லை. தற்காலத்தில் ஓலையின்மேலுள்ள எழுத்தை நம்பாதார் கல்லின்மேலுள்ள எழுத்தைப் பெருஞ் சான்றென எண்ணல் மரபாயிற்று. கருங்கல், ஓலையைக்காட்டிலும் உரம்பெற்றதால், அதை எழுதுவிப்போர் குணம்மாத்திரம் வேறுனதென்றுஎண்ணலாகாது. ஓலையில் விபரீதப்நேருமேல், கருங்கல்மேல் எத்துணையோபங்கு அதிகமும் நேரக்கூடுமென்பதை வெட்டெழுத்தறிஞர் (Epigraphists) நமது தேசத்தில் எண்ணுவதில்லை. மேற்கண்ட சிலாசாசனத்தில் சிறுத்தொண்டர் அவ்விடம் சென்றதாக யாதும் வெளியாகவில்லை. சேக்கிழாரும் சிறுத்

* ஈசனடி யார்க்கென்று மியல்பான பணிசெய்தே
யாசில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவற்காகப்
பூசன்முனைக் களிறுகைத்துப் போர்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார் (5).
மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்
சேக்கிழார் - சிறுத்தொண்டநாயனார் புராணம் [தார் 9

தொண்டர் வெற்றியை அந்நகரத்தில் கல்வெட்டில் காட்டியதாகவும் கூறவில்லை. தமிழர்சேனை வடநாடுகளில் கி. மு விலும் பல நூற்றாண்டுகள் சென்று வெற்றிபெற்றன வென்பது திண்ணம். கரிகால் சோழன், சேரன்செங்குட்டுவன் முதலானோர் இமயமால்வரை வரைக்குஞ் சேனையை விடுவது சாதாரண காரியமாயின், வாதாபி நகருக்குத் தமிழர் படைகள் எத்துணைமுறை சென்றனவோ, எத்துணை வெற்றிகள் எவ்வெக் காலங்களிற் பெற்றனவோ அறியோம். அத்தகைய பல வுளவென அநுமானிக்கலாமேயன்றி, நமக்குப் போதுமான ஆதாவுகள் இல்லை. போதுமான ஆதாவுகளின்மையால் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடியிடுவதுபோல் இரண்டுதுண்டுகளைப்பிணைத்து இதுதான் அதுஎன்பது தர்க்கவொழுங்கில் நிலைக்காது. வாதாபிநகரக் கல்வெட்டையும் சேக்கிழார்கூற்றையும் அறிஞர் பிணைப்பினும் அவை ஓரேகாலந்தா னென்பதற்குப் போதுமான பற்றுமில்லை.

நாம், தமிழ்மறையாகிய தேவாரங்களை யுற்றுநோக்குவோமாயின் சிறுத்தொண்டரைப்பற்றிய பாசுரங்கள் பல விருப்பினும், ஒன்றேனும் அவரைப் போர்வீரரெனக் காட்டவில்லை. கோட்புலிநாயனார் யுத்தவீரனாயிருந்ததைச் சுந்தரர் "கூடாமன்னரைக் கூட்டத்தில்வென்ற கொடிறன் கோட்புலி" யென்று புகழ்ந்ததுபோல், சம்பந்தரேனும் அப்பரேனும் இவரைப் போர்வீரனாகக் கூறாத காரணம்யாது? சேக்கிழார்பெருமான் கர்ணபரம்பரையாய்த் தான் "கேட்டகதைகளைக் கேட்டவாறு எழுதினேன்" எனத் திருநாவுக்கரசுநாயனார் புராண ஆரம்பத்திலும் அந்தத்திலும் கூறுவதால், கர்ணபரம்பரைக் கதைகள் உண்மையில் எவ்வளவு மாறுதல் கற்பித்தல் முதலியனவால் திருந்தியவோவென்பது நாம் ஐயுறலாகாதோ? ஆகையால் வாதாபிநகரக் கல்வெட்டும், சேக்கிழார் சிறுத்தொண்டர்வாதாபியைவென்றவீரரெனக்கூறும் கூற்றும் ஆக இவ்விரண்டின் சேர்க்கையே சம்பந்தர் காலநிர்ணயத்தை முடிவான தீர்மானத்திற்குக்கொண்டுவரப் போதாதென்பது அறிஞர் ஆமோதிக்கலாம்

2. சம்பந்தர் காலநிர்ணயத்திற்கு மற்றொருவலிய சான்று காண்போம்:-பௌத்தமதமும் சமணமதமும் தென்னிந்தியாவில் வழங்கியகாலம் கி. பி. ஆரம்பத்தினின்று ஐந்தாறு நூற்றாண்டுகளெனவும், 7-ம் நூற்றாண்டில் அவை அற்றுப்போனதால், சம்பந்தர் புத்தரையும் சமணரையும் வென்றகாலம் 7-ம் நூற்றாண்டாகவேயிருத்தல்வேண்டுமாதலால் சம்பந்தர்காலமும் அஃதே யென்பர் பல தமிழறிஞர். இக்கொள்கைக்கு இந்துதேசசரித்திராதிபர் கொள்கைகளும்ஆதரவாம். வடமொழிப் புலமையானும் ஆங்கிலக்கல்வியானும், தமிழ்மறைகளைக் கண்ணெடுத்தும்பாராத இந்துதேச சரித்திராசிரியர் கொள்கைகளை மறுக்க நமக்கு ஏற்றமில்லையாயினும், பழந்தமிழை நோக்குங்கால் பௌத்தமும் சவணமும் வடஇந்தியாவிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தனவென்று எண்ண இடமில்லை. அவை தென்னிந்தியாவினின்று வடநாடு சென்றனவென்றே எண்ணத்தக்க ஆதாவுகள் கிடைக்கின்றன.

கௌதமசாக்கியமுனிக்கு முன்னரே சாக்கியமதம் தென்னிந்தியாவின்கண் பரவியிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. கௌடல்யரின் அர்த்தசாஸ்திரத்தில் கண்டுள்ளபடி, பாண்டியநாட்டு முத்து அகில் முதலிய வியாபாரப் பொருள்கள் சந்திரகுப்தன் அவன் மூதாதைகள் காலத்தில் ஆரியவர்தத்தில் வழங்கியனபோல் இங்கிருந்து புத்தமதம் அவ்விடம் சென்று பரவியிருக்கலாம். புத்தசமயம் என்பது பக்தி ஞானங்களைத் திருநெறிபோல் வற்புறுத்தாத புதுசமயமாகும். புத்தன் என்பதற்குப்புதியதுஎன்று பொருள். புத்தன்சந்தை என்பதற்கு மலையாளபாடையில் "புது சந்தை" என்பது பொருளாம். (திருவனந்தபுரத்தில் இப்பெயர் வாய்ந்த பேட்டை ஒன்றுண்டு) ஆகையால் கடவுளற்ற இச்சமயத்தைப் புதுசமயமென்றும், சாக்கிய சாஸ்திரத்தை ஆதாவாகக்கொள்வதால் சாக்கியமென்றும் கூறப்படும். ஆறு சாஸ்திரங்களில் ஒன்றென வடமொழிப்புலவர்கள் கொள்ளும் சாக்கியம் கௌதமபுத்தனால் உற்பத்தியானதெனக் கொள்ளாராதலால், சாக்கியம் கௌதம சாக்கியமுனிக்கு முற்பட்டதென்றே வடமொழியாதாவுகளாலும் கூறல்வேண்டும். பௌத்தனால் இது வடநாட்டில் விருத்தியடைந்தது. ஆனால் தென்னாட்டில் இக்கொள்கையோரைச் சீவரத்தார் என்றும் சாக்கியரென்றும், தேரரென்றும் மொழிவர். இடைச்சங்கத்தார் காலத்திலேயே இவர்கள் இருந்ததாகக் காணப்படுகின்றனர். ஆகையால் சாக்கியம் பௌத்தனுக்குப்பின் பிறந்தது. அவன் காலத்திற்கு 3, 4, நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தென்னிந்தியாவுக்கு வந்து பரவியது. அதற்குப்பின்னரே நமது சமயகுரவர்கள் அவதாரம் செய்தனர் என்று கொள்ளல் பழந்தமிழை நோக்குங்கால் சிறிதேனும் ஒப்பத்தக்கதாயில்லை. ரோமாபுரியில் கிறிஸ்தவமதம் பரவியதுபோல், புதுமதம் வரப் பழந்தமிழர் இடங்கொடார். திசைச்சொற்களும், வடசொற்களும் வாராது தடுக்கும் சங்ககாலத்தில் புறநாட்டுச்சமயம் நுழைவதும், உள்ளூர் சமயக்கோயில்கள்போல் அவர்களும் கோயில்களைக்கட்டி ஒற்றுமையாய் வழிபடுவதும் பழந்தமிழ்நாட்டில் ஆகக்கூடிய காரியமோ? வைணவத்தைப்போல் உள்நாட்டில் சைவத்துடன், சாக்கியமும், சமணமும் உற்பத்தியாகி வழங்கியதால்,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

* * * *

வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்
அறவோர் பள்ளியு மறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்

ஒன்றாய் ஓரே நகரத்தில் சண்டை சச்சரவின்றி யிருந்ததைச் சிலப்பதிகாரத்திற் காண்கின்றோ மல்லவா? இவற்றை யோசிக்குமளவில் பௌத்தமத நிலையால் நமது சமயகுரவர் காலம் நியமிக்க எல்லைக்கற்கள் போடலாமோ என்னும் சங்கை யெழுகின்றது.

3. இவ்வாறே சமணமதமும் ஒருவகைத் திகம்பர சைனிய மதமென்று இந்துதேச சரித்திரக்காரர்கள் கூறுவார். அவர்கள் கணக்கின்படி சைனம் பரவிய காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டுக்குப் பின்னரென்றும் அதைச் சைவம் அழித்தது சிலநூற்றாண்டுகளுக்குப் பின்னராதலால், இவ்வகைய ஆராய்ச்சிகாரர் சம்பந்தரை கி.பி. 8-ம் நூற்றாண்டிலும் வைப்பார். நமது சமயக்குரவர்கள் இற்றைக்கு நூறுவருடங்களுக்கு முன்னரிருந்தவராயினும், அவர்தம் பெருமையாதும் சிறக்காது. மேற்கண்டவாதிகள் கொள்கையை யாமோதிக்கலாமோ வெனின், சம்பந்தர்காலச் சமணர் இந்துதேச சரித்திரத்திற் காணும் சைனர்போல் வடமொழிப் புலவர்களா யிருக்கவேண்டும். ஆனால் அப்பர் சம்பந்தர் காலச் சமணரின் வடமொழிப் புலமை அடியிற்கண்ட பாசுரங்களாலறியலாம்:—

வரியி ருந்தமி ழேபடித் தாளுறு
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினன்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே.

அப்பர்-திருப்பழையாறை வடதளி-திருக்குறுந்தொகை 9.

சந்து சேனனு மிந்து சேனனும்
தரும சேனனுங் கருமைசேர்
கந்து சேனனுங் கனக சேனனு
முதல தாகிய பெயர்கொளா
மந்தி போல்திரிந் தாரி யத்தோடு
செந்த மிழ்ப்பய னறிகிலா
அந்த கர்க்கெளி யேன லேன்றிரு
வால வாயர னிற்கவே! சம்பந்தர் -

என இருவரும் சமணருக்குத் தமிழன்றி ஆரியம் தெரியாதென்று கூறுவது மெய்யன்றோ? சம்பந்தரோ "சமணருக்கு ஆரியமும் தெரியாது, செந்தமிழ் தெரிந்தும் செந்தமிழ்ப் பயனறியா வந்தகர்" என்று பிரத்தியட்சத்தில் அவர்களைப் பழித்தார். "மந்திபோல் திரிந்து" என்னும் அடைமொழி, திகம்பர நிலையை உணர்த்துமெனினும் மந்திக்குப் பிடிவாதம் குணமாதலால், குரங்குப்பிடிபோல் தமிழைப் பிடித்துக்கொண்டு ஆரியத்தைத் தொடார் என்னும் கருத்துச் சிறப்பாகும். நமது சமயகுரவர் மொழி பொய்யெனக் கொண்டாலன்றி, அவர்காலச் சமணர்கள் வடநாட்டுத் திகம்பரசைன ரல்லரெனவே கொள்ளல்வேண்டும். இச்சமணர்கள் ஆசிரியர்களாய் எடுக்கும் இருபத்தினான்கு தீர்த்தங்கரர்களை, உலக ஆரம்பத்தினின்று கணக்கெடுப்பதால், தமிழர் தென்னிந்தியாவில்வந்து சேர்வதற்குமுற்பட்டவரென்றாகினும் கொள்ளலாகாதோ? தென்னிந்தியாவுக்குத் தமிழருடன் குடியேறிய சமணம் வடநாட்டிற்பரவி சைனமதமாய் விளங்கியதென்று நாம் ஏன்கொள்ளலாகாது?

இவை மூன்றும் நாம் யோசிக்குமளவில் சங்கம் முதல் சமயகுரவ ரீறாக உள்ளவர்களின் காலவரையறை யாராய்ச்சி புனர்விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது கிரமமன்றோ?



## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[536வது பக்கத் தொடர்ச்சி]

உள்ளமு மறிவு மீண்டு மோத்தன.

கூனியின்நாவினை ஆடவிட்டுக் கைகேசி வாளாவிருந்தனள் என்றால் அது அவள் குறித்த பொருளைக் கேட்குஞ் சிந்தனையாலன்று. சீற்றத்தின் மிகுதியால் தன்வயமற்று அவளைத் தகைதற்கு மாற்றாளாய் இதுகாறுந் தாழ்ந்தனள். எனினும், கல்வி இளமை கணக்கில் ஆற்றல் வில்வினையுரிமை அழகு வீரம் முதலிய எல்லையில் குணங்கள் பரதனுக்கே எனப் பிரிநிலை ஏகாரத்தால் இராமனை நிந்தித்த சொற்கள் கைகேசியின் சினத்தைக் கனற்றி விட்டன. இன்னமும் இருந்து அக்கூனியின் கொடுஞ் சொற்களை இவளால் ஆற்றுதற் கியலவில்லை.

வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்க னற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேக யர்க்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்க யற்கண்கள் செவப்புறநோக்கினள்சொல்லும்

[வாய் கசக்கும்படி மந்தரை சொன்ன கொடிய சொற்கள், எரிகின்ற நெருப்பில் நெய்யை விட்டதுபோல் கோபத்தை அதிகப்படுத்த, கேகய அரசனது திருமகளாகிய கைகேயி தன், விளங்கும் இள வரிகள் வாய்ந்த கயல் போன்ற கண்கள் சிவந்துநோக்கிப் பின்வருமாறு சொல்வாள்]

வெயின்மு றைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர்மு தற்பொரு டிறம்பினு முறைதிறம் பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிரு றப்புலைச் சிந்தையா லென்சொனாய் தீயோய்

[கிரணங்களின் வரிசையையுடைய சிறந்த சூரியன் முதலிய பெரியோர், உயிர் முதலிய பொருள்களே தத்தம் தன்மையிலிருந்து மாறினும், தம்முடைய முறையிலிருந்து பிறழாதவர். கேகயம் என்னும் மயிலின்பேரை அடுத்துவரும் என் குலத்தின் உரிமையும், மனுவை முதலாகவுடைய தயாதன் மரபும் பழுதடையும்படி, ஏ கொடியோய், உன் அற்பப் புத்தியால் யாதுசொல்லினாய்]

எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்

[இதனால்நீ, எனக்கேனும், என் மகன் பரதனுக்கேனும், தருமத்தினின்று தவறினவர் நிரகம் சேர்வார் என்பதை நோக்கினால் உனக்கே யேனும், நல்லதைச் செய்தவள் ஆகமாட்டாய். ஆகையால், பகுத்தறிவு இல்லாதவளே, உன் தலைவிதி வந்து தூண்ட மனம்போனபடி யெல்லாம் பேசுகின்றாய்]

பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழே
னிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
திறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுஞ் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் [illegible]க்கோ.

[பிறந்தும் இழக்கலாவதும், இறந்தும் பெறலாவதும் புகழ் என்னும் அதுவொன்றே,—எல்லாம் தத்தம் தன்மையிலிருந்து திரிந்தாலும், நீதியே திரிந்தாலும், நன்னெறியின் உறுதி மாறுபட்டாலும், செய்கின்ற தவங்கள் தவறினாலும், குற்றமற்ற வீரம் வழுவினாலும் எங்களுக்குரிய கிரமத்தினின்று மாறுபடுவது தகுதியாமோ]

போதி யென்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனன் புறஞ்சில ரறியின்
நீதி யல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தாய்
ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள்.

[என்னெதிர் நில்லாது அப்புறம் போ. உன் அற்பமாகிய நாக்கினை நான் அறுக்காமல் பொறுத்துக் கொண்டேன். வேறு யாரேனும் இதனை அறிவாராயின், நீதியும் நெறிமுறையும் அல்லாதனவற்றை நினைந்த குற்றத்திற்கு ஆளாவாய், ஆகையால், "மதிகெட்டவளே, வாயை அடக்கிக் கொண்டு கிட" என்று கைகேசி கூனியை உரப்பினள்]

முறையலா நெறி முயலலாகாதெனும் எண்ணமே கைகேசியின் மனதில் முதல் நிற்கின்றது. இராமனுக்கும் அவன் அன்னைக்கும் வந்து எய்துகின்ற திருவினிற்குத் தான் தரிப்பதெங்ஙனம் என இவள் சிந்தித்தாளல்லள். தனக்கும் தன் மைந்தனுக்கும் நேரநின்ற தாழ்மையை இவள் கணிக்கப் புகுந்திலள். பெருமையுஞ் சிறுமையும் இன்னஇன்னவாறு இருக்குமென்றும், அதனதன் தன்மையால் தன்னிலை எவ்வகைமாறி என்னும் என்றும் உணர்வது, அரசரிற்பிறந்து அரசரில் வளர்ந்து அரசரிற் புகுந்து பேரரசியான கைகேசி அனையவர்க்கு இயல்வதொன்றன்று. தங்கள் நிலைமைப தமக்கு இயற்கையாய்ப் பொருந்தப்பெற்றவர்க்கு அதனின்று உயர்தலென்றேனும் அதனிற் றாழ்தலென்றேனும் செயற்கைச் செய்திகளை நினைக்கவும் தெரிவதில்லை; நினைத்தாலும் அதன்பொருள் யாதென அறியுமாறில்லை. ஆதலின், செவந்தவாய்ச் சீதையும் கரியசெம்மலும் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதற்கும், பரதன் வெறுநிலத்திலிருப்பதற்கும்உள்ளவேற்றுமை யாதெனக் கைகேசி உணர்தல் தேற்றிலள். இராமன் பூமியாண்டால் பரதன் ஏன் விரதமா தவங்கள்செய்து வனத்தினில் வைகவேண்டுமென்பது இவ்வரசியின் எண்ணத்திற் கெட்டவில்லை. மன்னர்மாலையில் எண்ணுறப் பெறுதலால் பரதனக்கு எவ்வகைப் புதுச்சிறப்பொன்று வந்தெய்துமென்பதும் அவள் அறிவின் எல்லைக்குள் அடங்கியதன்று. தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப் பரதனைப் போக்கிய பொருள் யாதென வினவவேண்டும் என்ற அவாவும் அவளுக்கு எழுந்திலது. கல்வி இளமை ஆற்றல் வில்வினையுரிமை அழகு வீரம் எனும் எல்லையில் குணங்கள் பரதனுக்கு இருந்தனவென்று மகிழ்தற் குரியவளேயன்றி, இராமன் முடிபுனைவதால் பரதனுக்கு அவை புல்லிடை உகுத்த அமுதமாவது எங்ஙனமென்று தெரிதற் குரியவளல்லள். ஆதலாற்றான் கூனியை மறுத்துரைத்த கைகேசியின் சொற்கள் இவ்விடயங்களைத் தொடவுமில்லை. இராமனுக்கேயன்றிப் பரதனுக்குத்தான் பட்டம்கட்டினும் அதனால் இராமனுக்கும் கௌசலைக்கும் எக்குறை வருமென்று இவள் எண்ணத்திற் கெட்டுவதும் இயல்பன்று. எனின், "நீதியல்லவும் நெறிமுறையல்லவும்" நினைப்பதன் கொடுமையே அவள் உணர்ந்தாள். மரபும் முறையும் வழுவலாகாதெனும் வாய்மையே அவள் இயற்கையுணர்வு பற்றிநின்றது.

கைகேசி உள்ளமும், ஆற்றல்சால் கோசலை யறிவும் இவ்வகையிலும் ஒத்தன. உள்ளத்துணர்வின் இயற்கையால் வரன்முறைமரபு வழுவுதற்காற்றாது அவள் உளம் நடுங்கியதென்னின், "நின் காதல் திருமகன் பரதனே துங்கமாமுடி சூடுகின்றான்" என முறுவலரும்பிய முகத்தினோடு இராமன் இனிதுரைத்தபோது கௌசலையும்,

"முறைமையன் றென்பதொன் றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினும் நல்லனால்
குறைவி லன்னெனக்........"

கூறி, "மன்னவன் ஏவியது அன்றெனுமை மகனே உனக்கறன்" என்று தேறினள். முடியொன்று இருப்பதாலும் இல்லாததாலும், பரதனுக்கேனும் இராமனுக்கேனும் மற்று, அவர்களைத்தொடர்ந்து தனக்கேனும் கைகேசிக்கேனும், உயர்வேனுந்தாழ்வேனும் வந்துறுதற் கொன்றுமில்லை என்பதனை நன்கு கோசலை அறிவாளாதலால் இவளும், "வரன்முறை திறம்புதல் வழக்கன்று" என்பதையே வற்புறுத்திய கைகேசியைப்போலவே, "முறைமையன் றென்பதொன்றுண்டு" என்னுமவ் வொன்றையே சிறிது சிந்தித்தவளாயினள். "ஆற்றல் நல்லற மல்லது இல்லாமையால், ஏற்றம் அல்லது இழிதகவு இல்லை" என்று முன்னரே கோசலத்தின் கொள்கையெனக் கம்பர் குறித்திருந்த வாய்மையைக் கைகேசி உணர்ந்தும், கோசலை அறிந்தும் இருந்தனர். ஆயினும், உணர்வினால் உய்க்கப்பெற்ற கைகேசி மைந்தர் நால்வர்க்கும் வேற்றுமை உற்றிராதிருந்ததற்கும், அறிவினால் ஆற்றிய கௌசலை வேற்றுமை மாற்றியிருந்ததற்கும், அந்தத்தில் நேர்ந்த மாறுபடு முன்னர்க் காட்டப்பெற்றுளது. சோதனை சூழ்ந்தபோது உணர்வோ தளர்ந்துதிரிந்திட அறிவுதான் தன்னிலை சாயாமல் நிற்கலாயிற்று. அவ்விதமே இவ்விடத்திலும் வரன்முறை மரபினை விழைந்து அதன்படி ஒழுகுமோர் ஊக்கத்தோடெற்றெழுந்த கைகேசியின் உள்ளம் விரைவினில் திரிந்து கூனியின் சூழ்ச்சிக்கு இரையாகி முன்னோனிருக்கப் பின்னவனை அரசனுக்க இசைந்தது. வரன்முறை புரிவது வழக்கு என்று உணர்ந்தவள் செய்தி இவ்வகை முடிய, வரன்முறையொழுகல் அறம் என்றறிந்த கோசலை, அறத்தின் திறத்தினை ஆராய்ந்து, மன்னவன் ஏவியது அன்றெனுமையே அவ்வறம் ஆதும் எனத்துணிந்தாளாதலின், தன்னருமைந்தன் வனத்திற் கேகவேண்டுமென்பது தெரிந்த பின்னரும் தன்னுறுதி தளராமல் தலைநின்ற மேன்மையளாயினள்.

ஒட்டக்கூத்தர் பாடிய

**தக்கயாகப் பரணி**

(உரையுடன்)

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

**கம்பராமாயணம்—பாலகாண்டம்**

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

**ஏமாங்கதத் திளவரசன்**

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

**முருகன்—ஓர் உழவன்**

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1–8.

**திருக்குறள்**

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

**பெருமாள் திருமொழி**

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

**ஆறெழுத்தந்தாதி**

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

Estd. **NATIONAL** 1906

**INSURANCE COMPANY LIMITED.**

*Head Office:*-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.*

**R. G. DAS & Co,** OR **K. S. GOPALAYYA**

*Managers.* *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

**ANCIENT JAFFNA**

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5—8—0.** **V. P. Charge Extra.**

*MANAGER:—*

***KALANILAYAM,***

***11, VELLALA STREET,***

**Purasawalkam, MADRAS.**

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




# வர்த்தமானம்

இங்கிலாந்துதேய நாவலாசிரியரும், ஆவி உலக வாராய்ச்சி வல்லுநருமான கானண்டாயில் சென்ற வாரத் துவக்கத்தில் காலமானார் என்று தெரிகின்றது.

***

காந்தி அடிகளது எங்இந்தியா நவஜீவன் பத்திரிகைகளுக்கு அவசர அச்சுச்சட்ட ஆர்டினன்ஸின் படி பம்பாய் அரசாங்கத்தார் 2000 ரூபாய் ஜாமீன் கேட்டனர் என்றும், அச்சுக்கூடத்தார் ஜாமீன் கொடுக்கமறுக்கவே அச்சுக்கூடம் பறிமுதல் செய்யப்பட்டதென்றும் பம்பாய்ச் செய்தி கூறுகின்றது.

***

மீரத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் விக்ரகங்களுக்குக் கதரே அணிவிப்பதென்று கோயில் நிர்வாகஸ்தர்கள் கூடி முடிவுசெய்து அவ்வாறே ஜூலைமாத முதல் செய்துவருகின்றனர் என்று தெரிகின்றது.

***

காங்கிரஸ் சபையும் அச்சபையின் நிர்வாகக் கமிட்டியும் சட்ட விரோதமானதென்று ஸ்ரீ மோத்திலால் கைது செயப்பட்டதை அன்னிபெஸண்டம்மையார் கண்டிக்கின்றார். மேலும் தாம் காங்கிரஸ் கமிட்டியில் சேர்ந்துகொண்டு வேண்டியதைச்செய்யத் தயாராகவிருப்பதாகவும் இந்தியாவிற்குத் தந்தி அனுப்பியுள்ளார்.

***

ஜெர்மனியில் கலியாணம் செய்து கொள்ளாதிருப்பவர்களுக்கு வரிவிதிக்க மந்திரி சபையினர் யோசித்துக்கொண்டிருக்கின்றனர் என்றும், சீக்கிரத்தில் ஜெர்மன் மந்திராலோசனை சபையின்முன் இவ்விஷயம் வரும் என்றும் அயல் நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

திருவல்லிக்கேணி ஹைரோட்டிலுள்ள மனோன்மணி அச்சுக்கூடத்தில் இரகசியமாகப் பங்களூர்குதிரைப்பந்தையத்திற்கெனச் சிலர் சூதாடுவது போலீசாருக்குத் தெரியவந்தது. சென்னை நகர குற்ற இலாக்கா இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் கிருஷ்ணையர் மேற்படி அச்சுக்கூடத்தில் சோதனைபோட்டு மூன்று பேரைக் கைதுசெய்தனராம்.

***

ஸ்ரீரங்கவாசியான அஷ்டபத்ரிஸர்திய வீராசாரியார் அஷாட சுத்த பௌர்ணமி தினமாகிய கடந்த வியாழனன்று அக்கினிஷ்டோம ஸோமயாகம் துவக்கியுள்ளார். இந்த யாகம் 5 தினங்கள் நடைபெறும் என்று திருச்சியிலிருந்து ஒரு நிருபர் எழுதுகின்றார்.

***

இனி நடக்கவிருக்கும் சட்ட சபை எலக்ஷனுக்குச் சென்னை மத்திய கிறிஸ்தியர் சபையின் பிரதிநிதியாக நிற்கப்போவதாக, சென்னை அரசாங்கக் கலால் இலாக்கா மந்திரியாக விருந்த ஸ்ரீமான் P. N. ஆரோக்கியஸாமி முதலியார் அறிவித்துள்ளார்.

***

ஸ்ரீமான் வி. ஜெ. பட்டேல் ராஜிநாமாச் செய்ததால் காலியான இந்தியசட்டசபைத் தலைவர்ஸ்தானத்திற்கு மௌல்வி யாகுப் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று டில்லிச் செய்தி கூறுகின்றது.

***

பம்பாய் நகரிலுள்ள கள்ளிறக்குபவர்களில் 500 பேர் ஒன்றுகூடி, இனித்தாங்கள் கள் இறக்கும்தொழிலைச் செய்வதில்லை என்றும், தங்கள் இனத்தில் சேர்ந்த மற்றவர்களையும் இத்தொழிலை மேற்கொள்ளாதிருக்குமாறு செய்யமுயல்வதென்றும், அப்படி மீறி நடப்பவர்களைப் பகிஷ்காரம் செய்வதென்றும் முடிவு செய்துள்ளனர் என்று பம்பாய்ச் செய்தி மூலம் தெரிகின்றது.

பார்லிமெண்டு சபையில் இந்தியா விஷயமான ஒரு கேள்விக்குக் காபினட்டுசபை யளித்தவிடைவருமாறு: சட்ட விரோதமான இயக்கத்தின் தலைவரான காந்தி அடிகளை, இங்கிலாந்தில் கூடவிருக்கும் ஸர்வகட்சி மஹாநாட்டிற்கு அழைத்தல் இயலாது.

***

வியாபார விஷயமாகக் கேட்கப்பட்ட கேள்விக்குக் காபினட் சபை அளித்த பதில்:—சென்றவருஷத்தில் இந்தியாவில் இறக்குமதியானதைவிட இவ்வருடம் 100-க்கு 23 வீதம் ஜவுளி சாமான் இறக்குமதி குறைந்திருக்கின்றது.

***

சென்னைச் சுதேசப் பொருட்காட்சி சபையினர் கோகலே மண்டபத்தில் காட்சிச் சாலையை நிறுவிவிட்டனர். இம்மாதம் 15ந் தேதியன்று காட்சிசாலை திறந்து வைக்கப்பட்டது. ஜூலை முழுதும் காட்சி நடைபெறும். காட்சிப் பொருளைக் காணச் செல்பவர்களுக்கு 4 அணு கட்டணமும், 12 வயதிற்குட்பட்டவர்களுக்கு 2 அணு கட்டணமும் விதிக்கப்படும் என்று மேற்படி காட்சிச்சாலைக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

***

கல்கத்தா சட்டக் கல்லூரிப் பரீட்சை நடைபெறவில்லையாம். பரீட்சை தர்பங்காமஹாராஜா கட்டிடத்திற் கெதிரில் வைத்துக்கொள்ளப்பட்டது. என்றாலும் அங்கு முப்முறமாய் மறியல்நடந்ததால் மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் போக இயலவில்லை. எனவே பரிட்சை நின்றது என்று கல்கத்தாச் செய்தி கூறுகின்றது.


திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
இயற்றிய செந்தமிழ் நூல்கள்

### இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

இஃதொரு சமரச சன்மார்க்க நூல். இராமலிங்க சுவாமிகள் ஷடாந்த சமரச சன்மார்க்கத்தில் நின்று, அருணெறியோம்பி, உயிர்கள் வழிபாடே கடவுள் வழிபாடு என்பதை யுணர்ந்து, சமயவாழ்வு நடாத்திய விதம், அவர் ஆண்டவனை நோக்கிச் செய்த முறையீடு, அமுத அமுகை, அவர் கொண்ட குரு, பொருணூல், வழிபடுகடவுள், அவரடைந்த மரணமிலாப் பெருவாழ்வு, அதற்குரிய முறை முதலியன தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் காலத்துக்கேற்ற ஒன்று என்பது, நூலை முற்றும் வாசிப்போர்க்கு இனிது விளங்கும்.

விலை ரூபா 1

| | ரூ. | அ. |
|---|---|---|
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... | 2 | 8 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு ... | 1 | 0 |
| சைவத் திறவு ... | 0 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... | 0 | [illegible] |
| கடவுள் காட்சியும் தாயுமானரும் ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப்பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை அணா | | | 0 4 0 |

விலாசம்:— 'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



### காந்திக்கு ஜேய்!

கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினல் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 முந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளநேடு, சேன்னை.

## அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு



பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.



## ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சிலைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
3·2, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)